www.tamilarangam.net

விலை ரூபா 10.00

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# சுதந்திரம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்


ஆடி 2001 இதழ் -28

"83இல நம்மட சனங்களுக்கு
செஞ்ச அநியாயத்துக்கு
பதினெட்டு வருசத்துக்கு
பிறகு இப்பதான் இவைக்கு
முறையான அடி
கிடைச்சிருக்கு....."

-சனத்தின் குரல்-

## விமானப்படைத்தளம் தகர்ப்பு: சிறிலங்கா அரசின் தகர்வின் தொடக்கம்!

சிறிலங்கா அரசின் விமானப்படைத்தளம் தகர்க்கப்பட்டது. போர் விமானங்கள் பல சிதறடிக்கப்பட்டன. ஆனையிறவு முகாம் தொகுதித் தகர்ப்பானது இராணுவத்தின் முதுகெலும்பினை உடைத்தெறிந்தது எனின், விமானப்படைத்தளமும் விமானங்களும் தகர்க்கப்பட்டதும், அதன் நேரடி மறைமுக விளைவுகளும் அரசின் பொருளாதார முதுகெலும்பினைத் தகர்த்தெறிந்துள்ளது. ஆனையிறவு தாக்குதல் இராணுவத்தின் உளவியலை மோசமாகச் சிதைத்திருந்தது எனின் இத்தாக்குதலானது, ஒட்டுமொத்த அரச இயந்திரத்தின் உளவியலையும் தாக்குப்பிடிக்கும் திறனையும் மோசமாகச் சிதைத்துள்ளது.



இத்தாக்குதலானது பாரிய தாக்கத்தினையும் அதிர்ச்சியினையும் எதிரிகளுக்கு ஏற்படுத்திய போதிலும், தொடர்ந்தும் யுத்தத்தை நடாத்துவதில் குறியாகவிருக்கும் அரசு அதற்கான பொருளாதாரத்தை, தீவின் எஞ்சியிருக்கும் வளங்களை வல்லரசுகள், இந்திய அரசுகளிடமும் விற்றுப் பெற்றுக் கொள்ளும். மக்களைப் பட்டினி போட்டு, வரிக்கறப்புகள் செய்து பெற்றுக் கொள்ளும். அதிக வரியிறுப்பானது மேலும் மேலும் அரசு விரோதப் போக்கினை சிங்கள மக்கள் மத்தியில் தோற்றுவிக்கும். இது போன்ற தாக்குதல்களைத் தவிர்ப்பதற்கு அரசு, மேலும் படைகளையும் நிதியையும் சிறிலங்காவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்கச் செலவிட வேண்டியிருக்கும். இதன் காரணமாக, தமிழீழ ஆக்கிரமிப்பானது, படைப்பல ரீதியிலும் அவற்றைப் பராமரிக்கும் நிதித்தேவையின் அடிப்படையிலும் மோசமாக பலவீனமடைவது தவிர்க்க முடியாததே.

அரசுபடைகள் நேரடி மோதலுக்குத் தேவையான தாக்குதல் திறனையும் உளவியல் திறனையும் கணிசமாக இழந்துவிட்-

(தொடர்ச்சி 8ல்)

## சர்வசன வாக்கெடுப்பும் நமது நிலைப்பாடும்

நமது தேசத்தைப் பொறுத்தவரையில், 1972 அரசியல்சாசனம், தற்போதுள்ள அரசியல்சாசனம் யாவுமே நம்மீது வலிந்து திணிக்கப்பட்டவை. நம்மைக் குறிப்பான அடக்குமுறைக்குள் வைக்கும் இலக்குடன் உருவாக்கப்பட்டவை. ஐம்பது வருடங்களுக்கு மேலாக நமது தேசத்தின் அரசியல் விருப்புக்கு எதிரான ஆட்சிமுறைக்குள் நாம் பலவந்தமாக வைக்கப்பட்டுள்ளோம். நாம் இந்த ஆட்சிமுறையினையே நிராகரித்துப் போராடிக் கொண்டிருக்கும் போது, அதன் ஒருபகுதியாக அமையும் சிறிலங்கா அரசியல்சாசனம், சர்வசன வாக்கெடுப்பு என்பன நமது தேசிய அரசியல் அபிலாசைகளுக்கு முற்றிலும் புறம்பானதாகும். நமது தேசிய நலனுக்கும் தேசிய இருப்பிற்கும் விரோதமானவையாகும். எனவே நாம் இந்தக் கருத்துக் கணிப்பில் கலந்து கொள்ளாது ஒன்றிணைந்து ஒட்டுமொத்தமாக பகிஷ்கரிக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் இவ்வாறாக சந்தர்ப்பங்கள் வரும்போது, நமது தேசிய அபிலாசைகளை நமக்குரிய வழிமுறையில் வெளிப்படுத்தும் கருவியாக அவ்வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்வோம்.

தேசமாக இதனை நிராகரித்து விடுவதன் மூலமாக - கடந்த குடிசனக் கணக்கெடுப்பிலும் நாம் இவ்வாறாக நிரூபித்துள்ளோம்- நமக்கென தனியான அரசியல் அபிலாசைகள் உண்டு, தனியான தேசம், தாயகம், சுயநிர்ணயம் என்பதன் அடிப்படையில் அமைந்த ஒரு தனியான ஆட்சி முறையைக் கோரி நிற்கின்றோம் என்பதை உள்ளும், சர்வதேச அளவிலும் திட்டவட்டமாக வெளிப்படுத்துவோம். இதுவே நமது கட்சியினதும் தேசத்தினதும் அரசியல் நிலைப்பாடாகும். இதனையே நாம் விரிவாகப் பிரச்சாரம் செய்வோம். பிரச்சாரம் செய்யுமாறு அனைவரையும் கோருவோம். தேசிய விடுதலை இலக்கு நோக்கிய தங்குதடையற்ற நமது பயணத்தை சிங்கள தேசத்தில் நடைபெறும் எந்தவித அரசியல் நெருக்கடிகளும் சலசலப்புக்களும் திசை திருப்பாதிருப்பதை இனிவரும் நாட்களிலும் உறுதிப்படுத்திக் கொள்வோம்.

நமது தேசியப் பிரச்சனைக்கு முற்றிலும் அரசியல் சமத்துவம் மிக்க ஒரு தீர்வினை நோக்கி சிங்கள தேசம் முன்வராத நிலையில், நடைமுறையிலிருக்கும்

(தொடர்ச்சி 3ல்)

## ஆடி மாபெரும் ஹர்த்தால் தரும் புதிய செய்தி

சிறிலங்காப் படையினரின், தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்முறை மற்றும் அட்டூழியங்களை எதிர்த்து நமது மக்களால் ஜுலை 6ம் திகதி வெற்றிகரமாக மாபெரும் ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டது. சிங்கள அரசையும் ஒருங்கே சர்வதேச ஆதிக்க சக்திகளையும் அதிர வைக்கும் அளவிற்கு இப் போராட்டமானது, அடக்கப்பட்ட தேசங்களின் ஒன்றிணைந்த முயற்சியால் வெற்றிகரமாயமைந்தது.

1961இல் தனிச்சிங்கள சட்டத்தை எதிர்த்து தமிழ் மக்கள் நடாத்திய பாரிய சத்தியாக்கிரக போராட்டத்தின் பின்னர் - 40 வருடகால இடைவெளியின் பின்னர் - நமது தேசத்தின் பரந்துபட்ட மக்கள் எழுச்சி சிங்கள சோவினிச அட்டூழியங்களை எதிர்த்து முனைப்புடன் வெளிப்பட்டிருப்பது வரலாற்று முக்கியத்துவம் மிக்கதாகும்.



61' போராட்டத்திற்கும் தற்போதைய போராட்டத்திற்கும் இடையே ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டம் சார்ந்து பாரிய மாற்றங்கள், பாய்ச்சல்கள், திருப்பங்கள் நிகழ்ந்தேறியுள்ளன. வெகுஜனப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக பரிணமித்ததும், ஆயுதப் போராட்டம் தனது இலக்கில் முன்னேறியதும் அரசியல் திருப்பங்களுக்கு அடித்தளமிட்டதும், தற்போது அந்த பாரிய இராணுவ, அரசியல் வெற்றிகளின் பலத்தில்

(தொடர்ச்சி 9ல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# மக்களுக்குப் பொறுப்புச் சொல்வோம்! எதிரிகளின் ஊடுருவல் உத்தியை முறியடிப்போம்!!

இம்முறை இரண்டு விடயங்கள் குறித்துப் பரிசீலிக்கப்படுகின்றது. ஒன்று: விடுதலைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடாத்துபவர்களிடம் இருக்க வேண்டிய மக்களுக்கு பதில் சொல்லும் கடப்பாடு. இரண்டாவது, எதிரிப்படைகளின் ஊடுருவித்தாக்கும் உத்தியை மக்களின் பங்குபற்றுதலுடன் முறியடித்தல்.

எந்தவொரு புரட்சிகர அமைப்பும், விடுதலைப் போராட்ட அமைப்பும் மக்கள் மத்தியில் பிறப்பெடுத்து, மக்களிடம் இருந்து மனித வளங்களையும் மற்றய வளங்களையும் பெற்றுப் போராட்டத்தில் வெற்றிகளையும் சாதனைகளையும் படைக்கின்றன. போராட்டத்தலைமையில் இருந்து அணிகள் வரை அனைவருமே சமூகத்தின் படைப்பாகும். போராட்ட அமைப்புகள் தமது தொடக்கத்திலிருந்து, இறுதி வெற்றிகளைப் பெற்று அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது வரையிலுமான காலங்களில் மக்களின் அரவணைப்பிலும் தயவிலும் போசிப்பிலும் வளர்ச்சி பெற்று பலமடைகின்றன. மக்களின் தீவிர ஆதரவு காரணமாக சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுகின்றன. இதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

இவ்வாறாக பலம் பெற்று வெற்றி மேல் வெற்றிகளை ஈட்டிய பின்பு, அதிகாரங்களை தமது கைகளில்குவித்துக் கொண்ட பின்பு, பெரும்பாலான கட்சிகள், அமைப்புகள் மக்களை மறந்து விடுகின்றன. மக்களுக்குப் பதில் சொல்லும் பொறுப்பை மறந்து விடுகின்றன. அல்லது தமது தவறுகளை ஒப்புக்கு ஏனோதானோவென்று நியாயப்படுத்தி விட்டுப் போய்விடுகின்றன. தமது வெற்றிகளுக்கும் சாதனைகளுக்கும் முற்றிலும் தாமே பொறுப்பு, மக்கள் என்ன வெறும் பார்வையாளர்கள் தானே என்ற மனோபாவம் விடுதலைப் போராளிகளிடம் மேலோங்கி விடுகின்றது. நமது போராட்டம் முழுவதிலும் குறிப்பாக 84ம் ஆண்டு நடுப்பகுதியில் மக்களின் ஜனநாயகக் கோரிக்கைகளுக்கு ஆயுத அடக்குமுறைகளின் மூலமாக பதிலளிக்க முயற்சித்த வரலாறு நாம் அறிந்ததே. இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன.

இன்று விடுதலைப்போராட்டத்தை துறந்தோடியவர்கள், அவ்வாறு சென்று, எதிரிகளின் முகாம்களில் இருந்து செயற்படுபவர்கள், மக்களுக்குப் பொறுப்புச் சொல்வார்கள் என்று நாம் அதிகம் எதிர்பார்க்க முடியாது. ஆனால், இன்று விடுதலைப் போராட்டத்தை தலைமையேற்று வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப் புலிகள் அதற்கேற்ப மக்களுக்குப் பொறுப்புச் சொல்லும் கடப்பாட்டை அதிகளவில் கொண்டுள்ளனர். இதனூடாக மக்களுடனான நெருக்கமான உறவினைக் கட்டியெழுப்பும் கடப்பாட்டைக் கொண்டுள்ளனர். அப்போதுதான் மக்கள் எதிரிகளின் எப்படிப்பட்ட சூழ்ச்சிகளுக்கும் ஆட்படாது விடுதலைக்கும் விடுதலை அமைப்புக்கும் விசுவாசமாக இருப்பர். விடுதலைப் போராட்டத்திற்கு தொடர்ச்சியாக ஆளணி வளங்கள் தொடக்கம் தங்கம், வரி, வசூல்களை வழங்கியும் சிறிலங்கா அரசின் விமானக் குண்டுமழைகளைத் தாங்கியும், பொருளாதாரத்தடை என்ற எதிரியின் கூட்டுத் தண்டனைக்குச் சளைக்காமலும் போராட்டத்திற்கு பங்களித்த மக்கள் திரளை, ஒரே இரவில் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறவில்லை என்ற ஒரு காரணத்திற்காக துரோகிகள் என்று முத்திரை குத்துவது எவ்விதத்திலும் ஒரு விடுதலையமைப்பின் பண்பாக இருந்திருக்கவே கூடாது.



மேற்படி பின்புலத்தில் அண்மைக்கால நிகழ்வொன்று நம் கவனத்தை ஈர்க்கின்றது. விடுதலைப் போராட்டத்திற்குத் தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்கியவரும், சிறிலங்கா அரசினதும், அதன் கைக் கூலிகளினதும் மிரட்டல்களை எதிர்கொண்டு விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தையும் நமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழியங்களையும் எதிர்த்துக் குரல்கொடுத்து வந்தவருமான செய்தியாளர் சீவகன் அவர்களின் வான்முரசு பத்திரிகை விற்பனை அண்மையில் சுவீஸ் நாட்டில், விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களால் தடைசெய்யப்பட்டது.

இதில் கருத்துச் சுதந்திரம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் கண்ணோட்டத்திலும் அணுகுமுறையிலும் மாற்றங்கள் ஏதும் இல்லை என்பது ஒருபுறம் இருக்க, நடந்ததற்கு நியாயங்கோரி சீவகன் விடுதலைப்புலிகளின் அலுவலகம் முன்பு உண்ணாவிரதம் இருக்க முன்வந்தார். விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், சீவகனைத் தொடர்பு கொண்டு, நடந்த விடயம் குறித்து விசாரிப்பதாகவும் உண்ணாவிரதத்தை மேற்கொள்ள வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார். இது ஒரு வரவேற்கத்தக்க விடயமாகும். இருந்தும், தமிழ்ச்செல்வன் தரப்பில் பின்னர் தரப்பட்ட பதிலானது எவ்விதத்திலும் பாதிக்கப்பட்ட ஒரு பொதுமகனுக்குத் திருப்தியளிப்பதாக இல்லை. தமிழ்ச்செல்வன் பொறுப்பாகப் பதில் சொல்ல முன்வந்த பெருந்தன்மை கண்டும், மக்களுக்குப் பொறுப்புச் சொல்லும் கடப்பாட்டில் விடுதலைப் புலிகள் முன்னேற்றம் காட்டுவது குறித்தும் மகிழ்ச்சியுற்ற பலருக்கும் இது பெரும் விசனத்தை ஏற்படுத்தியது.

எந்தவொரு விடுதலை அமைப்பும், தமது தரப்பிலிருந்து சில சமயங்களில் மக்கள் மீது தவறுகள் இழைக்க வாய்ப்புண்டு. அவ்வாறான தவறுகளை மனந்திறந்து ஒப்புக்கொள்வதும், நடந்துவிட்ட தவறுகளுக்கு மன்னிப்புக் கோரி உரிய நிவாரணம் அளிப்பதும், அவ்வாறான தவறுகள் மறுபடியும் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதும் ஒரு விடுதலையமைப்பின் உன்னதமான பண்பே தவிர, அதுவொன்றும் கௌரவக் குறைவு அல்ல. கௌரவக்குறைவாக இதனைக் கருதுவது ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பின் போராட்டப் பண்புக்கு ஈற்றில் மாசு ஏற்படுத்துவதில் போய் முடியும்.

**************

இரண்டாவது விடயத்தினை எடுத்துக் கொண்டால், அண்மைக் காலங்களில் எதிரிப்படையினர் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட தமிழீழ தாயகப் பிரதேசங்களை ஊடுருவி, விடுதலைப் புலிகளின் தலைமை உறுப்பினர்களை இலக்கு வைக்கும் உத்தியைப் பயன்படுத்தி வெற்றிகளைப் பெற்றுள்ளனர். அரசும் படையினரும் பல்வேறு நெருக்கடிகளையும் தோல்விகளையும் சந்தித்துக் கொண்டிருக்கும் அதேசமயம் இந்த தாக்குதல் உத்தி மூலம் சில குறிப்பிடத்தக்க வெற்றிகளையும் நமது எதிரிகள் பெற்று வருகின்றனர். இது விடுதலைப் புலிகளின் பிரச்சனை மாத்திரம் அல்ல. இது நமது பிரச்சனை ஒட்டுமொத்த நம் மக்களின் பிரச்சனை. விடுதலைப் போராட்டம் எதிர்கொள்ளும் பிரச்சனையாகும்.

உளவுப்பிரிவுப் பொறுப்பாளர் பொட்டம்மானை இலக்கு வைத்து 93ம்ஆண்டு ஒரு கிரனேற் தக்குதல், அடுத்து வந்த காலப்பகுதியில் கொம்படி பகுதியில் குண்டுகள் ஓரிரண்டு இலக்கின்றி வெடித்தன. அதன் பின்பு, வன்னி உளவுப்பிரிவுப் பொறுப்பாளர் மல்லி முல்லைதீவின் எல்லை பகுதியில் ஊடுருவிய படையினரால் கொலை செய்யப்பட்டு அவரது தலை எதிரிகளால் வெட்டியெடுத்துச் செல்லப்பட்டது. அக்காலங்களில் வேறு சில விடுதலைப் புலிகளும் பதுங்கியிருந்து தாக்கும் அரசபடையினரால் வேட்டையாடப்பட்டிருந்தனர். அடுத்து வந்த காலங்களில், தென்தமிழீழப் பகுதியில் ஊடுருவித் தாக்கும் வழிமுறைகளை ஆங்காங்கு படையினர் பிரயோகித்தனர். இதற்குப் பதிலடிகளும் கொடுக்கப்பட்டுள்ளது.

எதிரிகளைப் பற்றி ஆகவும் குறைத்து மதிப்பிடுவது பாரிய போரியல் தவறு என்பது பலருக்கும் தெரியும். அந்தவகையில், இப்படிப்பட்ட தாக்குதல்களை வெற்றிகரமாக அரசபடையினர் மேற்கொள்வதற்கு அவசியமான தகவல் மற்றும் வளங்களை எப்படிப் பெற்றுக் கொள்கின்றனர்? இவற்றை நாம் அடையாளங்கண்டு முறியடிப்பது எங்கனம்? என்பது உடனடி அக்கறைக்குரிய விடயங்களாகும்.

அண்மைக்காலங்களில் விடுதலைப் போராட்டத்தில்

(தொடர்ச்சி 10ல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆடி 27: தமிழீழ அரசியல் கைதிகள் தினமாக அனுஷ்டிப்போம்

எதிரியினால் அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு சிறிலங்கா வதை முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமது பிள்ளைகள் விரைவில் விடுதலையாவார்கள் எனும் எதிர்பார்ப்புடன் தமிழீழ பெற்றார்கள் காத்திருக்கிறார்கள். தாயகத்திலிருந்து தொலை தூரத்திலுள்ள தனிமைப்படுத்தப்பட்ட சிறைக் கொட்டடிகளுக்குள் தம் பிள்ளைகள் வெறிகொண்ட எதிரியாட்களின் கைகளில் நிராயுத நிலையில் உடல்குதறி எறியப்படும் செய்திதான் வந்தடைகிறது.

எத்தனை காலம்... எத்தனை காலம்... தாயக விடுதலையின் பெயரால் நமது புதல்வியரும் புதல்வர்களும் எதிரியின் வதை முகாம்களில் அடைபட்டு கொடுவதை அனுபவித்த வருகின்றனர். எத்தனை ஆண்டு காலமாக நம்மவர்களின் குருதியாலும் கண்ணீராலும் சிங்கள வதைமுகாம்கள் நனைகின்றன. . .? நமது பிள்ளைகளின் அவல ஓலங்கள் காற்றில் நிறைந்து போயுள்ளன...? சிறைப்பட்ட நிலையில் கொடுவதைகளினால் துடிதுடித்து மரணித்த ஜீவன்கள் எத்தனை.. எத்தனை...? மனநோயாளிகளாக, அங்கவீனர்களாக மாறிப்போனோர் எத்தனை பேர்?


எல்லாம் எதனால்? தாயக விடுதலை.... சுதந்திர தமிழீழம் எனும் ஒரே நோக்கத்தினால் தான். அந்த உன்னதமான ஒரே அரசியல் இலட்சியத்தினால் தான். அரசியல் கைதி எனும் நிலையானது, நமது தேசத்திற்கு நம்மை அழித்துக் கொண்டிருக்கும் எதிரிகளினால் விதிக்கப்பட்டிருக்கும் நிலையாகும். ஈழத்தமிழர் எனும் வகையில் தேசமாக நாம் கொண்டுள்ள தீரா விடுதலை வேட்கைக்கு தண்டனையாக விதிக்கப்பட்டிருக்கும் நிலையாகும். இது நம் தேச அரசியல் போராட்டத்தின் ஒரு வெளிப்பாடாகும்.

அவ்வகையில் அரசியல் கைதிகளாக்கப்பட்ட, சிறைகளில் படுகொலைக்குள்ளான, இன்றும் சிறைகளில் வாடிடும் நமது அரசியல் கைதிகள் நம் தேச போராட்டத்தின், நம் தேசத்தின் விடுதலை வேட்கையின் குறியீடாகத் திகழ்கின்றனர்.

சிறைபட்ட நிலையிலும் அவர்கள் தமது வீரமிகு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதோ, இப்பொழுதும் மாணவர் திவ்வியனின் விடுதலை கோரியும், பெண்கள் மீதான பாலியல் சித்திரவதைகளை எதிர்த்தும் களுத்தறை சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிதரப் போராட்டம் நாடாத்துகின்றனர். ஒவ்வொரு கணமும் சிறைக் கதவுகளின் பின்னாலிருந்து நம்மவர்கள் உரிமைக் குரல் ஒலித்த வண்ணம் தான் உள்ளது.

அரசியல் கைதிகளின் அடிப்படை உரிமைகளுக்காகவும், தேசத்தின் அடிப்படை உரிமைகளுக்காகவும் நம் தேசத்தின் அரசியல் கைதிகள் தொடர்ச்சியாக போராடி வருகின்றனர். சிறைப்பட்ட நிலையில் இவர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் ஏற்படுத்திடும் சர்வதேச அளவிலான தாக்கம் சிறிலங்கா அரசிற்கு அரசியல் வீழ்ச்சியை ஏற்படுத்திடுவதில் பங்காற்றி வருகின்றன.

உலகெங்கும் போராடிக் கொண்டிருக்கும் சக்திகள் தமது அரசியல் கைதிகளின் முக்கியத்துவத்தை உலக அளவில் கௌரவிக்கும் வகையில் அரசியல் கைதிகளுக்கான தினத்தை அனுஷ்டிக்கின்றனர். அயர்லாந்து போராட்ட சக்திகள் தமது அரசியல் கைதிகளுக்கான தினத்தை கொண்டுள்ளனர். அவ்வாறே, துருக்கிய கம்யூனிஸ்ட் போராட்ட தரப்பினர், அரசியல் கைதிகள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகள், அவர்களது போராட்டங்கள் சார்ந்து சர்வதேச அளவிலான பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளனர். இதன் மூலம் பாசிச அரச கட்டமைப்பில் அரசியல் கைதிகளின் நிலை குறித்து விழிப்புணர்வை உலகளவில் ஏற்படுத்தி வருகின்றனர். அவ்வாறே பிலிப்பைன்ஸ், இலத்தீனமெரிக்கா, பாலஸ்தீனம், குர்திஷ் மற்றும் தென்னாசிய பிராந்தியத்தில் போராடிக் கொண்டிருக்கும் புரட்சிகர சக்திகள், அடங்கலாக அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலுமுள்ள பல்வேறு பட்ட போராட்ட சக்திகளும் அரசியல் கைதிகளின் உரிமைக்கும் வாழ்விற்கும் உரிய முக்கியத்துவமளித்து அவர்களுக்காக குரல் கொடுத்து வருகின்றனர். அரசியல் கைதிகளின் விவகாரமானது இன்று ஒரு சர்வதேச விவகாரமாகியுள்ளதும் கவனிக்கத் தக்கது.



சிறையில் வாழ்ந்த, வாழும் நமது அரசியல் கைதிகளின் போராட்டங்களை, துயரங்களை, கண்ணீரை, குருதியை, உயிர்த்தியாகத்தை நமது தேசம் தனக்குள் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். இவ் அரசியல் கைதி எனும் வாழ்வின் முக்கியத்துவத்தை நாம் ஒவ்வொருவரும் நமக்குள் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். நமது தாயக விடுதலையின் அங்கமான அரசியல் கைதிகளின் சிறைவாழ்வை நாம் மிகவும் உயர்வாக கௌரவிக்க வேண்டும். இதற்காக, நமது போராட்ட வரலாற்றில், நமது தேசத்தின் நாட்காட்டியில் நாம் அரசியல் கைதிகளுக்கான தினமொன்றை நிச்சயிப்போம்.

சிங்கள சோவினிச வன்முறை இயந்திரத்தினால் பெருமளவு தமிழ் அரசியல் கைதிகள் கோரப் படுகொலைக்குள்ளான சம்பவம் முதன் முதலில் 83ஆடி 25, 27 திகதிகளில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து பல சிறைப் படுகொலை சம்பவங்களை அரசியல் கைதிகள் எதிர்கொண்டுள்ளனர். 1999 களுத்தறை சிறைப்படுகொலைகள், 2000 ஒக்டோபர் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைகள் நம் தேசத்தின் இதயத்தில் ஈட்டிகளாக பாய்ந்த அண்மைய சம்பவங்களாகும். நமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் நாம் எதிர் கொண்ட, நம் இளம் சந்ததியின் மனத்தில் வைராக்கியத்தைப் பிறப்பித்த 83 ஆடி சிறைப் படுகொலைகள் தினத்தை நம் தேசத்தின் அரசியல் கைதிகள் தினமாக நிச்சயிப்போம்.

ஈழத்தமிழர் நம் அரசியல் வரலாற்றில் ஆடி 27 ம் திகதியை தமிழீழ அரசியல் கைதிகள் தினமாக அனுஷ்டிப்போம். அரசியல் கைதிகளின் அடிப்படை மனித உரிமைகளுக்காக போராடும் தினமாக இத்தினத்தை அடையாளப்படுத்துவோம்.

சிங்களஅரசின் வதை முகாம்களில் துன்புறும் அரசியல் கைதிகளின் நிலையை அவர்களுக்கான இத்தினத்தில் சர்வதேச கவனத்திற்குக் கொண்டு வருவோம். அரசியல் கைதிகளின் உரிமைகளுக்காக விட்டுக்கொடாது போராடுவோம்.

♦ சியா

## சர்வஜன... (1ஆம் பக்க தொடர்ச்சி...)

சிறிலங்கா அரசியல்சாசனம் மாற்றப்பட வேண்டும் என்பதோ, அதற்கு மாற்றாக எப்படிப்பட்ட அரசியல் யாப்பு கொண்டு வரப்பட வேண்டும் என்பதோ நமது அக்கறைக்குரியதல்ல. ஒருவிடயத்தை மாத்திரம் நாம் செய்ய முடியும். அதாவது சிங்கள மக்கள் சிறிலங்கா அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக நடாத்தும் எல்லாவகையான போராட்ட வடிவங்களுக்கும் நமது தேசத்தினதும், கட்சியினதும் ஒருமைப்பாட்டைப் பகிரங்மாகத் தெரிவித்துக் கொள்வோம். தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுத்தலைவியை வீட்டுக்கு அனுப்புவதா இல்லையா?, அரசுத் தலைமையில் சந்திரிகா தொடர்ந்தும் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை தீர்மானிக்கும் ஒரு சர்வசன வாக்கெடுப்பாக சிங்கள மக்கள் இதனைப் பயன்படுத்திக் கொள்ளட்டும். அவ்வாறே முஸ்லீம் மக்களும் மலையக மக்களும் தத்தமது தேசிய நலனில் இருந்து தமது அரசியல் செயற்பாட்டை சுதந்திரமாகத் தீர்மானித்துக் கொள்வர்.

தவிர சிங்கள தேசத்திற்கு நாம் ஒரு அறைகூவல் விடுக்கலாம். நீங்கள் எதிர்கொள்ளும் இன்றைய அரசியல் நெருக்கடிகள் அனைத்திற்கும் மூலகாரணம் உங்கள் அரசியல் யாப்பில் பொதிந்திருக்கும் சக தேசங்களை, சமூகங்களை தேசிய அடக்குமுறைக்கு உள்ளாக்கும் பண்பும், ஏகாதிபத்திய நலன்களுக்கு அனைத்து மக்களினதும் ஜனநாயக, அரசியல்.

(தொடர்ச்சி 10ல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## தமிழீழ மக்கள் குடியரசின் அடிப்படைப் பிரிவினர்கள்:09

# வைத்தியர்கள்

மனிதகுலத்தின் நல்வாழ்வை பாதுகாத்திடும் பெரும்பொறுப்பை தமது கைகளில் கொண்டிருக்கும் பிரிவினர்களாக வைத்தியர்கள் இருக்கிறார்கள்.

நமது தேசத்தின் வைத்தியர்கள் மேலைத்தேய ஆங்கில மருத்துவம் (அலோபதி) எனப்படும் பிரிவைச் சார்ந்தவர்கள், சித்தவைத்தியம் மற்றும் ஆயுள்வேதம் எனப்படும் சுதேச மருத்துவ முறைமையை முன்னெடுப்பவர்கள் என இருபிரிவினர்களாக உள்ளனர். இங்கு நாம் உரையாடலுக் கெடுத்துக் கொள்வது நமது தேசத்திலுள்ள ஆங்கில மருத்துவ துறையைச் சார்ந்த வைத்தியர்களது சமூக நிலையை ஆகும்.

கொலனித்துவ ஆக்கிரமிப்புடன், மூன்றாமுலகின் ஏனைய கொலனி யாதிக்கத்திற் குட்பட்ட மக்கள் சமூகங்களைப் போன்றே, நமது மக்களுக்கும் அலோபதி மருத்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. முதலில் கொலனிய நாட்டை சார்ந்த வைத்தியர்கள், கிறிஸ்தவ மத பாதிரிகள், அருட் சகோதரிகள் இம்மருத்துவ சேவையை நம் மக்கள் மத்தியில் மேற்கொண்டு வந்தனர். காலனி ஆட்சியின் ஆங்கிலக் கல்வி மூலம் நமது மக்களுக்கும் ஆங்கில (அலோபதி) மருத்துவத்தைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. ஆரம்பத்தில் நமது சமூகத்தில் சாதிய, வர்க்க ஆதிக்க நிலையில் இருந்த மேட்டுக்குடி சார்ந்த ஒரு சிலருக்கே இதற்கான வாய்ப்புகள் கைகூடி வந்தது. இங்கிலாந்தில் மருத்துவக் கல்வி பெற்ற இவர்கள் சொந்த மக்கள் மத்தியில் சேவையாற்ற வரவில்லை. வைத்திய தொழிலை சமூக அந்தஸ்த்திற்கும் அதிகாரத்திற்குமான தொழிலாகக் கருதிய இவர்கள் கொழும்பையே பெரிதும் தமது வாழ்விடமாக்கிக் கொண்டனர்.

இலங்கைப் பல்கலைக் கழகம் (இன்றைய கொழும்பு பல்கலைக்கழகம்) உருவாக்கப்பட்டதுடன் உள்நாட்டிலேயே மருத்துவக் கல்வியை பெரும் வாய்ப்பை நமது மக்களும் பெற்றனர். இதனால் நமது தேசத்தில் இருந்து குறிப்பிட்டளவு வைத்தியர்கள் உருவாகினர். உள்நாட்டிலேயே மருத்துவக் கல்வி பெற்று உருவான வைத்தியர்களின் சேவை சுதேச மக்களுக்கு கிடைக்கப்பெறும் நிலை உருவானது. தாய் மொழியில் உரையாடும் சொந்த தேசத்து வைத்தியர்களிடம் தமது நோய்களை தெளிவாக எடுத்துக் கூறி நிவாரணம் பெறக் கூடியதாயிருந்தது.

சிறிலங்கா பிரதேசங்களில் பணியாற்றி வந்த தமிழ் வைத்தியர்களில் ஒரு பிரிவினர் 58' இன் இனவன்முறை பாதிப்பினால் மேற்கு நாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர். இனவாத காரணங்களினால் தமிழ் வைத்தியர்களின் புலம்பெயர்வு ஆரம்பமானது இத்துடனேயே.

இனவெறி சிங்கள அரசின் தரப்படுத்தல் கொள்கை மற்றும் தமிழ்மொழி வழிக் கல்வி மீதான பல்வேறு அடக்குமுறைகளும் தமிழ் மாணவர்கள் வைத்தியத் துறையில் பிரவேசிப்பதற்குத் தடையாகின. தமிழ் வைத்தியர்களின் எண்ணிக்கை வீதம் சரியத் தொடங்கியது. இதன் காரணமாக வைத்தியத்துறை யில் நாட்டம் கொண்ட தமிழ் மாணவரில் வசதி படைத்த பிரிவினர் வெளிநாடுகள் நோக்கி நகரும் நிலைமை உருவானது.

71களின் பின்னர் தமிழ் வைத்தியத்துறையினர் சிங்கள இனவெறி அரச கொள்கையினால் நேரடியாக அடக்குமுறைகளை எதிர்



கொள்ளத் தொடங்கினர். மருத்துவ துறையில் உயர்கல்வி மற்றும் திறனைப் பெற்றுக்கொள்வதற்கான வெளிநாட்டு புலமைப் பரிசில் வாய்ப்புகள், பதவி உயர்வுகள் தமிழ் வைத்தியர்களுக்கு திட்டமிட்டு நிராகரிக்கப்பட்டன. இடமாற்றங்களிலும் தமிழ் வைத்தியர்களுக்கு பாரபட்சங்கள் காட்டப்பட்டன.

தமிழ் அறிவுத்துறையினர் மீதான சிங்கள இனவெறியின் காழ்ப்புக்கு வைத்தியர்களும் பலியாகினர். 77, 81, 83´இன வன்முறைகளின் போது தமிழ் வைத்தியர்கள் இலக்கு வைத்து தாக்கப்பட்டனர். இதனால் பெருமளவு வைத்தியர்கள் புலம் பெயர்ந்து செல்லத் தொடங்கினர்.

83களின் பின்னர் யுத்த சூழலில் வாழ்ந்தபடி மக்களுக்கு சேவையாற்றும் நிலை தமிழீழத்தில் வாழும் வைத்தியர்களுக்கு உருவாகியுள்ளது. எறிகணை வீச்சுகளுக்கும், விமானத் தாக்குதல்களுக்கும் மத்தியில், வைத்திய சாலைகளும் எதிரியின் அழித்தொழிப்புக்கு இலக்காகியுள்ள நிலையில் வைத்தியர்கள் தமது கடமையை மேற்கொண்டுள்ளனர். கடும் பொருளாதார தடையினால் வைத்திய சாதனங்களும் மருந்து பொருட்களும் இல்லாத நிலையில் நமது தேசத்து வைத்தியர்கள் பெருமுயற்சியுடன் மக்களின் உயிரைப் பாதுகாப்பதில் போராடி வருவது போற்றுதற்குரியது.

யுத்த சூழலில் வாழ்ந்தபடி சொந்த மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வரும் நம் தேச வைத்தியர்களின் மீது காழ்ப்புற்றுள்ள சிங்கள அரசும் படைகளும் கைக்கூலிகளும் வைத்தியர்களை துன்புறுத்துகின்றன. போராளிகளுக்கு துணைபுரிந்தார்கள் எனும் குற்றச் சாட்டில் வைத்தியர்களை கைது செய்து சித்திரவதை புரிகின்றன. படுகொலையும் செய்கின்றன. தமிழ் வைத்தியர்களின் அடிப்படை உரிமைகளை சிங்கள அரசு அத்துமீறுகிறது. யுத்த பிரதேசத்தில் பணிபுரியும் தமிழ் வைத்தியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இடர்காலக் கொடுப்பனவுகளை வழங்காதிருக்கிறது. வைத்தியர்களின் நியாயமான போராட்டங்களை உதாசீனம் செய்கிறது.

ஆனாலும், மக்கள் மீது அக்கறையுடைய வைத்தியர்களின் சேவையினால் சிங்கள அரசால் உடல் சிதைக்கப்படும் நம்தேசம் தன்னை மீள மீள குணப்படுத்திக் கொள்வதை சிங்கள அரசாலும் அதன் வன்முறை இயந்திரத்தாலும் தடுத்திட முடியாது போயுள்ளது. வைத்தியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய மனித நேயப் போராட்டத்தின் முன் சிங்கள இன வெறி தோற்றுப் போகிறது. இங்கு தமிழ் வைத்தியர்களின் சேவையே அவர்களின் விடுதலை அரசியலாக சிங்கள அரசிற்கெதிராக உயர்ந்து நிற்கிறது.

போராட்ட அமைப்புகளினாலும் வைத்தியர்களின் உரிமைகள் அத்துமீறப்பட்டன. வைத்தியர்கள் போராட்ட தரப்பினால் எதேச்சாதிகார அணுகுமுறை கொண்டு தமக்கு சேவையாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டனர். தனியார் மற்றும் அரச மருத்துவ மனைகளில் மருந்து பொருட்களும் சாதனங்களும் பொறுப்பற்ற வகையில் எடுத்துச் செல்லப்பட்டன. மக்களின் சார்பில் குரல் கொடுத்த வைத்தியர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர். இதனாலும் தேசப்பற்றுடைய வைத்தியர்கள் மனங்கசந்து தாயகத்திலிருந்து வெளியேறினர். போராட்டத் தரப்பால் வைத்தியர்களுக்கிழைக்கப்பட்ட அச்சுறுத்தலும் அகௌரவமும் இன்னும் முற்றாக நீங்கிவிட வில்லை. இன்றும் விடுதலை புலிகளின் நெருக்குதல்களை எதிர்கொண்ட நிலையில்தான் தாயகத்தில் வைத்தியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

யுத்தத் தீயின் மத்தியில் மக்களின் அன்றாட வாழ்வுடன் ஒன்றிணைந்து, மக்கள் எதிர்கொள்ளும் அவலங்களின் உயிர்த் துடிப்பான சாட்சிகளாக திகழும் நம் தேச வைத்தியர்களுக்கு போராடும் தேசத்தினரான நாம் உரிய கௌரவத்தை வழங்கிட வேண்டும். வைத்தியர்களின் அடிப்படை உரிமைகளுக்காக அவர்களது போராட்டங்களில் தேசமாக தோள்சேர்ந்து போராட வேண்டும்.

மக்கள் நலனுடன் தமது வாழ்வை பிணைத்துக் கொண்டுள்ள வைத்தியர்களை நாம் கௌரவிக்கும் அதே நேரம் இன்றைய இக்கட்டான காலகட்டத்திலும் சுயநலமிகளாக செயற்படும் வைத்தியர்கள் குறித்து நமது தேசத்தின் அதிருப்தியை நாம் அவர்களுக்கு உணர்த்திடவே வேண்டும். அரச வைத்தியசாலையில் பணியாற்றும் அதே நேரம் தமக்கான தனியார் வைத்திய மையங்களையும் செயற்படுத்தி வரும் வைத்தியர்கள் பணம் கொடுத்து வைத்தியம் பார்ப்பவர்களுக்கே முன்னுரிமை அளிக்கின்றனர். தம்மிடம் கட்டணம் செலுத்துபவர்களுக்கு அரச மருத்துவமனையின் சேவைகளை (சத்திரசிகிச்சை, பரிசோதனைகள் போன்றன) வழங்குவதில் முன்னுரிமை அளிக்கின்றனர். இது நேரடியாக அரச மருத்துவ மனையை நாடும் வறிய மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. இவ்வாறான பாரபட்ச போக்குகளை வைத்தியர்கள் தமது தொழில் அறநெறி சார்ந்து உடன் நிறுத்த வேண்டும்.

மக்களின் வரிப்பணத்தில் மருத்துவக் கல்வியைப் பெற்றுக் கொண்டுள்ள வைத்தியர்கள் மக்களுக்கும் தாயகத்திற்கும்

(தொடர்ச்சி 8ல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# டக்ளஸ் யாருக்கு சேவகம் செய்கின்றார்?


ஒரு அடக்குமுறை அரசானது அவ்வடக்குமுறைக்கு எதிரான உரிமைப் போராட்டத்தின் முதற் கட்டத்தில் அடக்கப்படும் தரப்பிலுள்ள சிலருக்கு சில சலுகைகளைத் தந்து விட்டு, **மக்களின் உரிமைகளைப் பறித்துக் கொள்கின்றது.** அடக்குமுறைக்கு எதிரான போராட்டமானது இந்த அற்ப சலுகைகளுக்கு அடிபணியாது வீறுகொண்டு எழுச்சி பெறும் அடுத்த கட்டத்தில் அரசானது மிக மோசமான அடக்குமுறைகளையும் யுத்தத்தையும் போராடும் மக்கள் மீது கட்டவிழ்த்து **அழித்தொழிப்பில் ஈடுபடுகின்றது.** இதனையும் முறியடித்துப் போராட்டமானது அதன் வெற்றி இலக்கினை நெருங்கத் தொடங்கும் போது, அதே அடக்குமுறை அரசானது அதிகமான சலுகைகளை மக்களுக்கு அள்ளித் தந்து **மக்கள் அடையவிருக்கும் வெற்றியைத் திசை திருப்ப தன்னாலான அனைத்தையும் செய்கின்றது.** இந்த இறுதி முயற்சிக்குத் தோதான கைக்கூலிகளையும் தன்னோடு இணைத்துக் கொண்டு, தனது தொடர்ச்சியான அடக்குமுறைக்கு முகமூடியாக இந்தக் கைக்கூலிகளை நன்கு பயன்படுத்த முனைகின்றது. எப்படித்தான் சுற்றி வளைத்து வந்தாலும் அடக்குமுறையாளர்களுக்கும் அவர்களின் அடிவருடிகளுக்கும் விதிக்கப்பட்டது முடிவில் தோல்வியொன்று மாத்திரமே.

நமது விடுதலைப் போராட்டமும் கூட இந்தப் பொதுவிதியை விட்டு விலகிடவில்லை. நமது விடுதலைப் போராட்டமானது வெற்றியின் இலக்கினை நெருங்க நெருங்க, போராட்டத்துடன் மக்கள் திரள் பல்வேறு வடிவங்களில் நெருக்கமான இணைந்து கொள்வது அதிகரிக்க அதிகரிக்க, சிறிலங்கா அரசானது அமைச்சுப் பொறுப்புகளையும் கோடிக்கணக்கான நிதியையும் தனது முகமூடியாகச் செயற்படும் ஈபிடிபி தரப்பிற்கு வாரி வழங்குகின்றது. இரத்னசிரி, மேவின் சில்வா, அனுருத்த போன்றவர்களின் சோவினிச கதகதப்பில் இருந்து வரும் அரசுத்தலைவி சந்திரிகா டக்ளஸ்களையும் கதிர்காமர்களையும் தனது அணிக்குள் எப்படி வைத்திருக்க முடிகின்றது என்ற மர்மத்தின் புதிர் இங்குதான் உள்ளது.

அதிகரித்து வரும், பொங்கிப் பெருகி வரும் நமது மக்களின் தேசிய உணர்வையும் தேசிய விடுதலையின் பால் மக்கள் சாரிசாரியாக அணிதிரள்வதையும் பலவீனப்படுத்துவதற்கு அரசும் டக்ளஸ் தேவானந்தா தரப்பும் திட்டமிட்டு நெருங்கிச் செயற்படுகின்றன. எவ்வாறெல்லாம் மக்கள் மத்தியில் நிலவும் வெளிகளையும் சிறிய சிறிய பலவீனங்களையும் துருவித்தேடிக் கண்டறிந்து, எதிரிகளுக்கு வழிகாட்டி அழைத்து செல்வதுதான் இந்த அடிமைகளின் செய்நன்றியாகும்.

டக்ளஸ் தரப்பினர் அப்பட்டமான தமது கைக்கூலித்தனங்களை மறைக்க இன்னமும் முயற்சிக்கின்றார்கள். விடுதலைப் புலிகளிடம் இராணுவ பலம் இருப்பதாகவும், தம்மிடம் அரசியல் பலம் இருப்பதாகவும் இருதரப்பும் இணைந்தால் ஒரு நாளில் இனப்பிரச்சனையைத் தீர்த்துவிடலாம் என பேட்டி தருகின்றார்கள். மறுகணம்.. அரசியலுக்கும் தமக்கும் சம்பந்தமில்லை. அரசு விடுதலைப் புலிகளுடன் பேசினால் பேசிவிட்டுப் போகட்டும் தமது ஒரே பணி மக்களுக்கு சேவை செய்து கிடப்பதுதான் என்கிறார்கள். இப்படிச் சொல்லிக் கொண்டு இவர்கள் செய்யும் அரசியல் கபடத்தனத்தைப் பாருங்கள்.

விபுலானந்தா இசை நடனக்கல்லூரியை பல்கலைக் கழகத்துடன் இணைத்துக் கொடுத்தமைக்காக ஒரு பாராட்டு. உண்மையில் நீண்டகாலம் பல்வேறு சக்திகளும் மாணவர்களும் தமது இந்த உரிமைக் கோரி விட்டுக் கொடுக்காது போராடி வந்தனர். இறுதி நேரத்தில் ஈபிடிபி புகுந்து சந்திரிகாவின் தயவில் விடயத்தை முடித்து விட்டு, விடயத்தைப் பிரமாதப்படுத்தியது. வவுனியா மண்டபத்தில் இருந்து இராணுவத்தை வெளியேற்றியதாக பிரச்சாரம் செய்யப்பட்டது. வடக்கு கிழக்கில் நமது மக்களின் ஐம்பதுக்கு மேற்பட்ட



பாடசாலைகளை இராணுவம் பலவருடங்களாக ஆக்கிரமித்துள்ளதே அப் படைகளை அங்கிருந்து அகற்ற முடியுமா இவர்களால்? பலாலி விமானத்தள மற்றும் இராணுவத்தள விஸ்தரிப்பினை தடுத்து நிறுத்தி, மக்களின் குடியிருப்புகளையும் நிலங்களையும் கோவில்களையும் மீட்டுக்கொடுக்க முடியுமா இவர்களால்? லிங்க நகர் இராணுவத்தள விஸ்தரிப்பு, மட்டக்களப்பு விமானத்தள விஸ்தரிப்பு என்பவற்றை தடுத்துநிறுத்த முடியுமா? மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க வகைசெய்ய முடியுமா இவர்களால்? திருமலை மக்களின் பணத்தில் கட்டப்பட்ட ஒரு பொதுச்சந்தையை இவர்களால் செயற்பட வைக்க முடிந்ததா?

மக்கள் மீது இராணுவதளபதிகளை,அரச இயந்திரங்களை கொண்டு பல்வேறு அநீதிகளை இழைக்கச் செய்து விட்டு, பின் தான் முன்வந்து தீர்த்து வைப்பதாக நடாத்தும் நாடகங்களை மக்கள் நன்கு அறிவர். மீனவர்கள் போராட்டங்கள், வைத்தியர்களின் போராட்டங்கள், வேலையற்ற பட்டதாரி மாணவர் போராட்டங்கள், என இப்படிப் பட்டியலிட்டுக் கொண்டு போகலாம். இறுதியாக யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் நான்கு அம்சங்கள் கொண்ட அடிமைச்சாசனத்தில் கையொப்பம் இட்டு, ஈபிடிபி குறுநில மன்னர் குழாமிடம் கையளிக்க வேண்டும் என சிங்களச் சக்கரவர்த்திகள் கட்டளை பிறப்பித்துள்ளார்கள்.

வில்லாக இருந்து இயக்கும் சிங்கள எஜமானர்களுக்கு மரண அடி விழும் போது, அம்பாகி நிற்கும் இவர்கள் இருந்த இடம் தெரியாது ஓடிவிடுவார்கள். சென்ற வருடம் பலாலி வீழ்ச்சியடையும் தறுவாயில், பெட்டி படுக்கைகளைக் கட்டிக்கொண்டு, படகுகளைத் தேடியலைந்ததை மறுபடியும் ஒருதடவை நினைவுபடுத்துவது அவசியம். இப்போதும் கூட பதின்நான்கு விமானங்கள் நொறுக்கப்பட்டதும், அதிகம் கலக்கம் கொண்டது சிங்க படையினரை விட இவர்களே.

இப்படியான தீய சக்திகள் நமது மக்கள் மத்தியில் வேரூன்ற முயல்வதற்கும், குறிப்பிட்டளவு வெற்றி பெறுவதற்கும் நமது போராட்டத் தரப்பில் நிலவும் பாரிய குறைபாடு ஒரு காரணமாகும். விடுதலைக்காகப் போராடும் அமைப்புகளுக்கும் மக்களுக்கும் இடையில் இறுக்கமான அரசியல் உறவு தாபிக்கப்படுவதில் நிலவும் வெளியினை (Space) இந்த எதிரிகள் குழுமம் நன்கு பயன்படுத்த முயல்கின்றது. அப்படிப்பட்ட வெளியை மக்கள் மத்தியில் விட்டு வைத்த தவறை விடுதலையை நேசித்து அதற்காக போராடிக் கொண்டிருக்கும் போராட்ட சக்திகள் உடனடியாக திருத்திக் கொள்ள வேண்டும்.

சாதிய ரீதியில் அடக்கப்பட்ட நமது மக்களை, நாற்பது வருடங்களுக்கு முன்னர் சிங்களக் கட்சிகள் ஊடுருவிய அதே வழிமுறையில் டக்ளஸ் போன்றவர்களைப் பயன்படுத்திச் சாதிக்க அரசு முயற்சிக்கின்றது. இதன் மூலம் போராட்டத்திலிருந்து இவர்களை அந்நியப்படுத்துவதும், குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கான ஆளணித்திரட்சியை முடக்குவதும் அரசின் திட்டமாகின்றது. விளிம்புநிலை மக்களின் மனங்களை வென்று, மேல்நிலைக்கு உயர்த்துவதாக பாசாங்கு செய்து, குறிப்பிட்டளவிற்கு வாய்ப்புகளை அளித்தும், பலவிதத்திலும் பலவீனப்படுத்துவதற்கு திட்டமிட்டு டக்ளஸ்கள் செயற்படுகின்றார்கள். அம்மக்களும் தமது உடனடி அடிப்படை நலன்கள் பூர்த்தி செய்யப்படுவதனால் டக்ளஸினால் உருவாக்கப்படும் இந்த மாயைக்குள் கவரப்பட்டு விடுகின்றனர். இது மக்களின் குற்றமல்ல. போராட்ட சக்திகளின் தவறாகும்.

தனிநபர்களை விட, மக்களின் உள்ளூர் பிரதிநிதிகள் மற்றும் அமைப்புகள் நிறுவனங்களைச் சந்திப்பதில் டக்ளஸ் கூடிய கரிசனை காட்டுகின்றார். இந்த முயற்சியில் டக்ளசும் அரசும் ஓரளவு வெற்றி பெறுவதை மதிப்பிட முடிகின்றது. அதேசமயம் இந்த இடைவெளியை அதிகப்படுத்தும் விதத்தில் போராட்டத்தில் குறிப்பாக விடுதலைப்புலிகளின் மக்கள் மீதான அதிகாரத்துவ வெளிப்பாடுகள், பாரபட்சம் மற்றும் விளிம்புநிலை மக்கள் தொடர்பாக அரசியல் அணுகுமுறைகள் என்பன காரணமாகின்றன.

தேசத்தினுள் நிலவும் அக முரண்பாடுகளை பயன்படுத்தியும் யுத்தக் கொடுமை காரணமாக மக்கள் மத்தியில் பெருகியிருக்கும் அவலங்களையும் பசி பட்டினிகளையும் வேலை வாய்ப்பின்மைகளைப் பயன்படுத்தியும் அரசும் டக்ளஸ் உம் தம்மிடம் குவிந்துள்ள வளங்கள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி நமது மக்களைத் தமது பக்கம் வென்றுவிட துடியாய்த் துடிக்கின்றனர். இவ்வாறான நம்பிக்கையில்

(தொடர்ச்சி 10ல்)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொது எதிரிக்கெதிரான போராட்டமும் அக அரசியல் சமத்துவமும்

தன்னைத் தவிர ஏனைய மக்கள் சமூகங்களினதும் இருப்பையும் சகித்துக்கொள்ள முடியாத பாசிசப் பண்பை சிங்கள சோவினிசம் எட்டியுள்ளது. எந்தெந்த வழிகளையெல்லாம் கைக்கொண்டு சக தேச மக்களை அடக்கியொடுக்க முடியுமோ அந்த நாசகார வழிகளையெல்லாம் தயங்காது மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. சிங்கள அரசும், தலைவர்களும், அரச வன்முறை இயந்திரம், சிங்கள தீவிர பாசிச சக்திகள், சிங்கள இனவெறி மகாசங்கம், சோவினிச சிங்கள, ஆங்கில ஊடகத்துறை... என அனைவரும் ஒன்றிணைந்து இலங்கைத் தீவில் வாழும் ஈழத்தமிழ், மலையக தமிழ், முஸ்லிம் தேசங்கள் மீது போர்ப் பிரகடனம் செய்துள்ளன.

சிங்கள சோவினிசத்தின் மூர்க்கமான தாக்குதலை முஸ்லிம் மக்களும் மோசமாக எதிர்கொள்ளும் சூழல் உருவாகிவிட்டது. தமிழர்கள் மீதே வன்மமாக வெளிப்பட்டுவந்த சோவினிசம் முஸ்லிம்களின் குரல் வளையையும் நெறிக்கத் தொடங்கியிருப்பதற்கு மாவனல்லை வன்முறைகளும் தற்பொழுது கல்முனையில் நடந்திருக்கும் படுகொலைகளும் சான்றாகும். இப் படுகொலையானது முஸ்லிம் தேசத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருப்பதுடன், வயது வேறுபாடின்றி முஸ்லிம் மக்கள் பெருமளவில் கலந்துகொண்டு எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடும் நிலைமை விரிவாகியுள்ளது.



சிங்கள சோவினிசத்தின் அனைத்துவகையான அடக்குமுறைகளையும் எதிர்த்து நமது தேசம் ஆயுதம் தாங்கி போராடி வருவதுடன் தேசத்தின் பல்வேறு சக்திகளும் வெகுஜன எழுச்சிப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். நமது தேசத்தின் பன்முக சமூக சக்திகளின் போராட்டங்கள் சர்வதேச அளவில் சிங்கள அரசுக்கு பாதிப்பை ஏற்படுத்திடுமளவுக்கு போர்க்குணாம்சத்துடன் வெளிப்பட்டு வருகிறது.

முஸ்லிம் மக்களும் சிங்கள அரசுக்கெதிராக பல்வேறு வடிவங்களில் கிளர்ச்சி செய்யத் தொடங்கியுள்ளனர். அவ்வகையில் நம்மிரு தேசங்களும் நமது பொது எதிரியான சிங்கள இனவெறி அரசை எதிர்த்துப் போராடுவதில், இனவெறிக்கெதிரான போராட்டத்தில் பொதுப் புள்ளிகளைக் கொண்டிருக்கிறோம்.

நம்மிரு தேசங்களும் இப்பொதுப் போராட்டங்களில் தமது தனித்துவங்களுடன் கூட்டிணைந்து போராடவும், போராட்ட முன்னெடுப்புகளை பரஸ்பரம் பலப்படுத்திக் கொள்ளவும் வேண்டிய தேவையும் உருவாகியுள்ளது. தனியொரு மக்கள் சமூகமாக எதிர்த்து நிற்பதிலும் விட, அந்த எதிரியினால் பாதிக்கப்படும் அனைத்து மக்கள் சமூகங்களும் திரண்டு போராடுகையில் அப்போராட்ட மானது மேலும் உருக்கு வலிமை பெற்றதாகவும், சர்வதேசத்தின் முன்னால் பன்மடங்கு நியாயப்பூர்வமான போராட்டமாகவும் அமையும்.

அண்மைய மக்கள் போராட்டங்களை நாம் இதற்கு உதாரணமாகக் கொள்ள முடியும். இவ்வாறு பரஸ்பர பலப்படுத்தலானது பயன்படுத்தும் நோக்கம் அற்றதாகவும், மேலும் பிரக்ஞை பூர்வமானதாகவும், மக்கள் மயப்பட்டதாகவும் அமைகையில் அப்போராட்ட உக்கிரத்திற்கு முன்னால் எதிரி நொறுங்க நேரிடும்.

தமிழ், முஸ்லிம் இரண்டு தேசங்களும் பொதுப் போராட்டங்களில் இணைவதால் உருப்பெறும் அரசியல் திரட்சி, தனக்கெதிராக ஆவேசமான மக்கள் கொந்தளிப்பாக வெளிப்படுகையில்தான் ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்கு உள்ளாக நேரிடும் என்பதை சோவினிச எதிரி உணராமலில்லை. அதனாலேயே நமது பொது எதிரி பிரித்தாளும் கொள்கையை பிரயோகித்து நம்மிரு தேசங்களையும் அந்நியப் படுத்தும் காரியங்களையும் ஆரம்பத்திலிருந்தே மேற்கொண்டு வருகிறது.

எதிரியின் எந்தவிதமான கபட நோக்கங்களுக்கும் நம்மிரு தேச மக்களும் பலியாகிவிடக் கூடாது. நம்மிரு தேசங்களின் இருப்பையே சகித்துக் கொள்ள முடியாது நமது தாயகப் பகுதியில் அத்துமீறி நமது மக்களை கோரக் கொலை புரியும் எதிரியை பொதுப் போராட்டத்தில் கூட்டிணைந்து தோற்கடிக்க வேண்டிய கால கட்டம் உருவாகியுள்ளது. நம்மிரு தேசங்களும் சிங்கள சோவினிசத்தினால் எதிர் கொள்ளும் அடக்குமுறைகள், அதற்கெதிரான நமது போராட்டங்கள், போராட்டங்களில் நம்மிரு தரப்புக்குமிடையிலான பொதுப் புள்ளிகள், அப்பொதுப் புள்ளிகளை நாம் இணைந்து பரஸ்பரம் பலப்படுத்தவும், போராட்டங்களை மேலும் செறிவான பண்பில் முன்னெடுக்க வேண்டியதன் தேவை ஆகியவற்றை மதிப்பிடவும் செயற்படவும் வேண்டிய வரலாற்றுக் கடமை நம்முன் விரிந்துள்ளது.

முஸ்லிம் தேசத்துடன் கூட்டிணைந்து போராட வேண்டிய இத்தேவைக்கு குறிப்பாக ஈழத்தமிழரான நாம் உரிய முக்கியத்துவமளித்து செய்படுவோமாயின், அவர்களுடன் ஒருமைப்பாடு கொள்ளவும், எதிரியின் மீது வெற்றியை நிறுவவும் வரலாறு நமக்கு ஏற்படுத்தித் தந்திருக்கும் வாய்ப்பான சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டவர்கள் ஆவோம். இதை நாம் நமது நலன் எனும் நிலையிலிருந்து பார்க்காது, அடக்கப்பட்ட தேசங்களின், குறிப்பாக பொதுத் தாயகத்தில் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் இரு மக்கள் சமூகங்களின், தேசங்களின் நல்லுறவு, விடுதலை எனும் கண்ணோட்டத்திலிருந்தே பாக்க வேண்டும்.

முஸ்லிம் மக்களுடன் பொது எதிரிக்கெதிரான ஒன்றுபட்ட போராட்டம், ஒருமைப்பாடு என்பவற்றை உருவாக்குவதில் முன்கையெடுத்து செயற்பட வேண்டியது நமது தேசத்தின் கடப்பாடாகும். அதற்கு முன்நிபந்தனையாக நாம் முஸ்லிம்களை அரசியல் சமத்துவத்துடன் மதித்து செயற்பட வேண்டும். அவர்களுக்கு நமது தரப்பால் இழைக்கப்பட்டுள்ள அனைத்து அநியாயங்கள், எதேச்சாதிகார வன்முறை பிரயோகங்கள், இறைமை அபகரிப்பு... யாவற்றிற்காகவும் பகிரங்க மன்னிப்புக் கோருவதுடன் அவ்வாறான தவறுகள் இனிமேலும் நடைபெறாது என்பதை உத்திரவாதப்படுத்தவும் வேண்டும். இதன் மூலமே சிங்கள சோவினிசத்திற் கெதிரான பலமான கூட்டை முஸ்லிம் தேசத்துடன் கூட்டிணைந்து நம்மால் உருவாக்க முடியும்.

அவ்வகையில், நம்முடன் அக்கம்பக்கமாக வாழும் போர்க்குணாம்ச உள்ளாற்றல் மிக்க தேசத்துடன் பொதுப் போராட்டங்களில் இணைவதும், பரஸ்பர ஒத்துழைப்புகளை வழங்குவதும், சேர்ந்து பலப்படுத்துவதும் நம்மிரு தேசங்களினதும் அரசியல் விடுதலையை தீவிரப்படுத்திடும்.

◆ சுபத்திரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழகத்தில் தமிழீழ அகதிகளின் நிலை

சிங்கள இனவெறி அரசின் அழித்தொழிப்பு நடவடிக்கைகள் அதிகரிக்க தொடங்கியதுடன் கூடவே, நமது மக்கள் தமது பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து இடம்பெயர்வதும், வெளியேற்றப்படுவதும் வழமையாகிவிட்டது. எதிரிகளின் எறிகணைகளிலிருந்தும், படைநகர்வுகளின் போதான அழித்தொழிப்புகள், பரவலான கைதுகள், கூட்டுப்படுகொலைகள் போன்றவற்றிலிருந்து தம்முயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தாயகத்திற்குள்ளேயே மக்கள் ஊர்விட்டு ஊர், பிரதேசம் விட்டு பிரதேசம் இடம்பெயர்வதும் அகதிமுகாம்களில் தஞ்சமடைவதும் தேசத்தில் பரவலாக நிகழ்கிறது. எனினும் நம் மண்ணை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் எதிரியின் தாக்குதல்கள் பரவலாக நிகழும் நிலையில் மக்களுக்கு தாயகத்திற்குள்ளேயான இடம் பெயர்வுகள் அர்த்தமற்றதாகி விடுகின்றன. அத்துடன் பொருளாதாரத் தடையினால் எதிர்கொள்ளும் வாழ்க்கைத் துன்பங்களும் சகித்துக் கொள்ள முடியாது போகும் நிலையில் நமது மக்கள், நமது தாயகத்திற்கு மிக அண்மையிலுள்ள, மொழிரீதியான பிணைப்பைக் கொண்டுள்ள தமிழகத்திற்கு அகதிகளாக புலம்பெயர்கின்றனர். தமிழகத்தில் தமக்கு உயிர்ப் பாதுகாப்பும் தமது வாழ்வை ஓரளவுக்காவது தக்கவைத்துக் கொள்வதற்கான வாய்ப்புகளும் கிடைக்கப்பெறும் எனும் நம்பிக்கையுடன் தமிழீழ மக்கள் தமிழகம் நோக்கி இடம்பெயர்கின்றனர்.

ஆனால், நமது மக்கள் எதிர்பார்க்கின்ற வாழ்வை தமிழகத்தில் மேற்கொள்ள முடிகிறதா என்றால் அங்குள்ள நிலைமைகள் அதிர்ச்சியளிப்பதாக இருக்கின்றன. 83 காலப் பகுதிகளில் தமிழக மக்கள் ஈழத்தமிழர்கள் பால் கொண்டிருந்த அனுதாப உணர்வலைகளின் காரணமாகவும், இந்திய மைய அரசின் நலன்கள் சார்ந்தும் இந்திய மற்றும் தமிழக அரசுகளினால் புலம்பெயர்ந்த நமது மக்கள் ஒப்பீட்டளவில் மோசமான முறையில் நடாத்தப்படவில்லை. இந்திய அரசிற்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையிலான முரண்பாடுகள் சமரத்திற்கு வந்ததுடன் தமிழகத்திற்கு புலம் பெயர்ந்த நமது மக்கள் புதிய வடிவிலான அடக்குமுறைகளை தமிழகத்திலும் எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

★ தமிழகத்திற்கு புலம்பெயரும் ஈழ மக்கள் கடலில் வைத்து கைது செய்யப்படுகின்றனர். இதற்கென விசேட கடற்படை மற்றும் கரையோர பொலிஸ் பிரிவுகள் உள்ளன. விசாரணைகளின் பின்னரேயே இம்மக்கள் முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றனர். அதிகாரிகள் நினைத்தால் விடுதலைப் புலிகள் என இவர்களை சிறைக்கு அனுப்பி விடலாம். அகதிகளிடம் லஞ்சம் பெறுவதும் பெண்களை தமது பாலியல் நடத்தைக்கு பலவந்தமாக உட்டுபத்த முயல்தல் போன்றனவும் இதில் பின்னிக் கிடக்கிறது.

★ போராட்ட சக்திகளுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப் படுபவர்கள் (தனிநபர்கள், குடும்பங்கள் - குழந்தைகள், முதியவர்கள் அடங்கலாக) விசேட முகாம்கள் எனும் கொட்டடிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இது சிறைப்படுவதற்கு ஒப்பான வாழ்வாகும். இவ்வாறு விசேட முகாம்களுக்கு அனுப்பப் பட்டவர்கள் பல வருடங்காளக வெளி உலகத் தொடர்பின்றி கடும் கண்காணிப்பின் கீழ் அவற்றில் அடைபட்டுக் கிடக்கின்றனர். போராட்ட சக்திகளை ஒடுக்கும் ஒரு நடவடிக்கையாக இவ்விசேட முகாம் முறைமை தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இது அடைக்கலம் தேடி வந்த இடத்தில் நடமாடும் சுதந்திரத்தையே மறுத்திடும் அடிப்படை மனித உரிமை மீறலாகும்.



★ போராளிகளாக சந்தேகிக்கப்படுபவர்கள் சிறைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இவ்வாறு சிறைவைக்கப் படுபவர்கள் பிணையில் விடுதலையாவதற்கும் வழக்காடுவதற்குமான வசதிகள் இல்லாத நிலையில் பலருக்கு தமிழக சிறைச்சாலைகளே வாழ்வாகியுள்ளது. மேலும், இவர்கள் பற்றிய தகவல்கள் கூட அநேகமான சந்தர்ப்பங்களில் இவர்களது குடும்பத்தினருக்கு கிடைக்கப் பெறுவதில்லை. இவர்கள் சிங்கப்பூருக்கோ அல்லது நேரடியாக சிறிலங்காவுக்கோ நாடுகடத்தப்படுவதும் நடைபெறுகிறது.

★ அகதி முகாம்கள் அனைத்தும் ஒருவகையில் திறந்த சிறைக் கொட்டடிகளாகவே உருவாக்கப்பட்டுள்ளன. இங்கு மக்கள் வெளியுலகிலிருந்து முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இதிலிருந்து அகதிகள் யாரும் சுதந்திரமாக வெளியில் சென்று வாழ முடியாது. முகாமுக்கு வெளியிலிருந்தும் (உறவினர்கள், நண்பர்கள்) யாரும் அகதிகளை சென்று சந்தித்திடவும் இலகுவில் அனுமதியில்லை. குறைந்தபட்சம் ஒரு வருடகாலம் முகாம்களில் கண்காணிப்பின் கீழ் வாழ்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமின்றி அன்றாட தேவைகளுக்காக, உழைப்பிற்காக வெளியில் செல்வது கூட கையொப்பம், விசாரணைகள், கண்காணிப்புகள்.... என்பதற்குட்பட்டே இருக்கிறது.

★ காவல்துறையும் அரச அதிகாரிகளும் நினைத்தால் இவர்களை எந்த நேரத்திலும் சிறைக்கனுப்பக் கூடிய நிலைமை உள்ளது. இதனால் பொலிசுக்கும் அதிகாரிகளுக்கும் மிகவும் அனுசரித்தும் அடிமைகளைப் போலவும் நடந்துகொள்ள வேண்டிய நிலையில் அகதிமக்கள் உள்ளனர்.

★ கடல் மார்க்கமாக தமிழகம் செல்லும் அகதிகளே பெரும் எண்ணிக்கையில் உள்ளனர். இம்மக்கள் தாம் தாயகம் திரும்ப விரும்பினாலும் அதற்கான வாய்ப்புகள் எளிதில் அமைந்துவிடாது. பல்லாயிரக்கணக்கான ரூபாய் பணமும் அதிகாரிகளின் அனுசரணையும் தயவும் தேவைப்படுவதால் அகதிகளில் பெரும்பாலானவர்கள் தாயகத்தை எண்ணி ஏங்கியபடி முகாம்களில் வாடிக்கொண்டிருக்கின்றனர். இந்திய அரசும் தனது நீண்ட கால நலன் சார்ந்து அகதிகளில் ஒரு பிரிவினரையாவது தடுத்து வைக்க வேண்டியதன் அவசியத்தைக் கொண்டிருப்பதால் புதிய புதிய அடக்குமுறை உத்திகளின் மூலம் அகதிகள் வெளியேற முடியாதவாறு நிலைமைகளை உருவாக்கி வருகிறது.

★ தமிழீழ விடுதலைப் போராட்டம் மற்றும் ஈழத் தமிழர் சார்ந்து தமிழக பார்ப்பனிய சக்திகளாலும், தமிழக அதிகாரத்துவத்தினாலும் உருவாக்கப்பட்டிருக்கும் எதிர்மறை கருத்தாக்கத்தின் காரணமாக அகதிமுகாம்களுக்கு வெளியிலும் ஈழ அகதிகள் நெருக்குதல்களை எதிர்கொண்டு வருகின்றனர். அன்றாட வாழ்வை நடாத்துவதற்காக உழைப்புப் போட்டி நிலவும் நிலையில், தொழில் முனைவர்களும் இடைத்தரகர்களும் ஈழ அகதிகளின் உழைப்பை முடிந்தவரையில் குறைந்த கூலிக்கு உறிஞ்சுகின்றனர். மிக மோசமான சூழலில் உடல் ஆரோக்கியத்தை பாதிக்கும் தொழில்களில் ஈடுபட நேர்ந்துள்ளது. அகதிகளாக இருப்பதால் தமது உரிமைகளுக்காக வாதாட முடியாத நிலைமையில் நமது மக்கள் உள்ளனர்.

★ **பெண்களின் நிலை மிக மோசமானதாயுள்ளது. பொலிஸ், அரச அதிகாரிகளின் அத்துமீறல்கள் அச்சுறுத்தல்கள் சகஜமான தொன்றாயுள்ளது. அகதிமுகாம்களுக்கு வெளியிலும் உள்ளூர் குண்டர்களின் வன்முறைகள் கொலைப் பயமுறுத்தல்களை எதிர்கொள்ள நேர்கிறது. இது சார்ந்து சட்ட ரீதியான பாதுகாப்பு ஈழப் பெண்களுக்கு கிடையாது. நமது** பெண்கள் கூட்டு வன்புணர்ச்சிக்குள்ளாக்கப்பட்டு படுகொலைக்குள்ளான பல சம்பவங்கள் பகிரங்கப்படுத்தப்படாது புதைக்கப்பட்டுள்ளன.

★ முகாம்களில் வசிப்பவர்களும் சரி, முகாம்களுக்கு வெளியில் வசிப்பவர்களும் சரி ஈழ அகதிகள் அனைவரும் பொலிசில் தம்மை பதிந்து கொண்டிருக்க வேண்டும். பொலிஸ் விரும்பிய போது அகதிகளது

(தொடர்ச்சி 9ல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## விமானப்படைத்... (1ஆம் பக்க தொடர்ச்சி...)

டமையினால், படைகள் பதிலுக்கு நிராயுதபாணி மக்கள் மீதான கொடூரங்களைக் கட்டவிழ்த்து விடும். கடந்த வருடம் ஆனையிறவு வீழ்ச்சிக்குப் பிந்திய காலங்களில் இப் போக்கு அதிகமாக இருந்ததை இங்கு நினைவுபடுத்தலாம். இந்த வகையில் நமது பிரதேசங்களில் இனஅழிப்புச் செயற்பாடுகள் தீவிரமடையும் வாய்ப்புகள் உள்ளது. படைகள் முகாம்களில் முடங்கியிருந்து கொண்டு தனது கவனத்தை ஊடுருவித்தாக்குதலில் குவிக்கும். இது போன்ற செயற்பாடுகளுக்கு தமிழ்த் துரோகக் குழுக்களைப் பயன்படுத்துவதும் அதிகரிக்கும். இத்தாக்குதலானது விடுதலைப் போராட்டத்தின் வெற்றி குறித்த நம்பிக்கையை நமது மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளமையினால், இனிவருங்காலங்களில் இத்துரோகக் குழுக்களை சீர்திருத்தம், சலுகைகள் என்ற ரீதியில் பயன்படுத்துவதை விட்டு கொலைப்படைகளாக கட்டவிழ்த்துவிடும் போக்கு அதிகரிக்கும்.

பொதுவில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில், இராணுவ இலக்குகள் மற்றும் தமக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு பழிவாங்குதல் பதிலடி, தமது அமைப்பின் குறிப்பான தினங்களை நினைவுபடுத்தல் (மாவீரர், கரும்புலி தினங்கள்..) போன்றவற்றை மையப்படுத்துவதாக இருப்பது வழமை. மாறாக, இத்தாக்குதலானது, பிரதானமாக 1983 கறுப்பு ஜுலையில் நமது மக்களுக்கு ஏற்பட்ட அழிவிற்கு ஒரு தார்மீக ஆறுதலாகவும் மறுபுறம் மக்கள் மீதான குண்டுத் தாக்குதலை நடாத்தும் விமானப்படைக்கு கொடுத்த மரண அடியாகவும் இருக்கின்றது.

தவிர, விமானத்தாக்குதல் அதனால் மக்களுக்கு ஏற்படும் இழப்புகள் குறித்து பல தடவை விடுதலைப் புலிகளால் முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கப்பட்டதும், விமான நிலையத்தில் முற்றிலுமாக சிவிலிய இலக்குத் தவிர்க்கப்பட்டுள்ளதும் போர்முறை விழுமியங்களைப் பின்பற்றுவதில் விடுதலைப் புலிகள் அதிக கரிசனையுடன் செயற்பட்டுள்ளதைக் காட்டுகின்றது.

சிறிலங்கா அரசில் நிலவிய சொற்ப ஜனநாயக அரசியல் மரபும் கூட இப்போது தன்னளவிலும் சிதைந்து விட்டது. அபாயகரமானதாகவும் அராஜகம் மேலோங்கியதாகவும் மாறிவருகின்றது. பொருளாதார மற்றும் சிவில் சமூக உள்ளகக்கட்டமைப்புகள் நலிந்து கொலைக்கலாச்சாரம் மலிந்து வருகின்றது. பரந்துபட்ட சிங்களமக்கள், அரசின் தேசிய அடக்குமுறைகளுக்கு இன்னமும் தாம் துணையாக இருப்பது பற்றி உணர்ந்து கொள்ளாமலும், தம்மீதான பல்வேறு அரசியல், பொருளாதார அடக்குமுறைகளையிட்டு பிரக்ஞையுடன் அரசிற்கு எதிராகப் போராடாதிருப்பதும் நெருக்கடி நிலைமை மேலும் மோசமான நிலைக்கு இட்டுச் செல்வதற்கு ஒரு காரணமாகின்றது.

கடந்த காலங்களில், கொலன்னாவ எரிபொருள் கிடங்கு, மத்தியவங்கி, உலக வர்த்தக மையம் போன்ற பொருளாதார இலக்குகளின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர். அதற்குப் பிந்திய காலங்களில் இதனைத்தவிர்த்து, தாயகப் பிரதேசங்களை மீட்பதில் கவனம் செலுத்தினர். அதன் பின்பு சமாதானம், யுத்தநிறுத்தம், நோர்வேயின் அனுசரணையுடன் அரசியல் பேச்சுவார்த்தை போன்ற அரசியல் செயற்பாடுகளில் அதிக கவனம் குவித்தனர். இக்காலங்களில் அரசின் பொருளாதார இலக்குகள் மீது மாத்திரம் அன்றி, சிறிலங்காவில் எல்லாவிதமான தாக்குதல்களும் தவிர்க்கப்பட்டிருந்தது. இந்த ஒரு வருடத்தில் இவ்வாறான நிலைமையைப் பேணுவதற்கு நம் தேசமும், விடுதலைப் புலிகளும் எத்தகைய பாரிய விலைகளைக் கொடுக்க வேண்டியிருந்தது என்பதை அறிவோம்.

இந்தவகையில் பொருத்தமான தருணத்தில் வெற்றிகரமாக நடைபெற்ற இக் கெரில்லாத் தாக்குதல் முற்றிலும் சரியானதும், அவ்வாறான தாக்குதல்கள் இராணுவ இலக்கு நோக்கி மாத்திரம் அன்றி, பொருளாதார இலக்குகளை நோக்கியும் மேற்கொள்ளுவது அவசிமானதுமாகும். இப்படிப்பட்ட தாக்குதலை நிறுத்தி வைக்குமாறு கோருவதற்கு எந்தவொரு வல்லரசுகள் மற்றும் பிராந்திய அரசுகளுக்கும் அருகதை கிடையாது.

ஆக தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் திட்டவட்டமான பண்பு மாற்றமாக சிறிலங்காவில் இராணுவ மற்றும் பொருளாதார இலக்குகளை தகர்ப்பது அவசியமாகின்றது. நமது பிரதேசத்தில் தாக்குதல் நிறுத்தப்படும் வரை, இராணுவம் ஆக்கிரமிப்பைக் கைவிட்டு முற்றாக வெளியேறும் வரை, பொருளாதாரத் தடை நீக்கப்படும் வரை இந்த வகை கெரில்லா அதிரடித் தாக்குதல் நடாத்தப்படுவது அவசியத்திலும் அவசியம்.

சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயத்தை வெல்வதற்கு நமது தேசத்தின் தரப்பில் போதுமான செயற்பாடுகள் இதுவரை செய்யப்பட்டுள்ளன. தற்போது அரசியல் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசின் கபடத்தனம் முற்றிலுமாகத் தெளிவாகி விட்டது. அரசு தனது முப்படைகள் கொண்டு நமது தேசத்தின் மீது உயிரிழப்புகள், பொருளாதாரத்தடை என அழிவுகளைச் செய்து கொண்டு, தனது பகுதியில் தாக்குதல் நடாத்தக்கூடாது என வாக்குறுதி பெறுவதும், தனது பொருளாதார நடவடிக்கைகளை தங்குதடையின்றி நடாத்த உத்தரவாதம் கோருவதும் எந்தவகையில் நியாயம்?

உண்மையில் விடுதலைப்புலிகளும் அனைத்து விடுதலைப் போராட்ட சக்திகளும் நமது தேசத்திற்குள் செய்யப்பட வேண்டிய அரசியல், ஜனநாயகக் கடமைகளை செய்து முடிப்பதுதான், முழுஅளவில் சர்வதேச அபிப்பிராயத்தை நாம் வென்று கொள்வதற்குச் செய்யப்பட வேண்டிய பணியாகும். இதுவே நமது விடுதலை இலக்கினை அடைவதற்குரிய எஞ்சியுள்ள தடைகளை அகற்றும். அக் கடமைகளில் உடனடியான கவனத்தைக் குவிப்போம். புறச்சூழலும் கூட இன்று இதனையே கோரி நிற்கின்றது

சிங்கள இனவாதம் தீவிரத்தன்மை பெற்றுவருவதும், ஆளுங்குழும போட்டா போட்டி முனைப்படைந்து செல்வதும் நமது தேசியவிடுதலைக்குச் சாதகமான விடயங்களாகும். தம்மைத்தாமே ஆள முடியாத இவர்கள், சக சமூகங்களை அரவணைத்து சமத்துவம் பேணுவார்கள் என்பது நினைத்தும் பார்க்க முடியாத விடயமாகும்.

ஏவியவரிடமே திரும்பி வரும் எறிவளை (Boomerang) கருவிபோல, 18 வருடங்களுக்குப் பின்னர், 83 இனஅழிப்பின் விதைப்பு தற்போது அதன் உச்ச இழப்பினைச் சுமந்து வந்து சிங்கள அரசின் முகத்தில் பலமாக அறைந்துள்ளது. இத்தாக்குதல் அல்லது இதுபோன்ற தாக்குதல்களின் பாரிய விளைவுகள் பற்றியும் அதற்கான தோற்றுவாய் தேசிய அடக்குமுறை என்பது குறித்தும் சிங்கள தேசத்தின் பரந்துபட்ட பிரிவினர் பெரிதும் அக்கறை கொண்டிருக்கவில்லை என்பது தெள்ளத்தெளிவானது.

சிறிலங்கா அரசின் மீதான நமது தேசத்தின் இந்த வெற்றியானது, சிறிலங்கா அரசின் தகர்வின் தொடக்கமாகும். இது இவ்வரசினைத் தாங்கிப் பாதுகாத்துவரும் ஆதிக்க சக்திகளின் கூட்டிற்கும் ஒரு பேரிடியாகும்.

## வைத்தியர்கள்... (4ஆம் பக்க தொடர்ச்சி...)

நேர்மையாக இருப்பது எத்தனை அவசியமானது?

அமையப் பெறும் தமிழீழ குடியரசானது வைத்தியர்களின் சேவையை மேலும் சிறப்பான வடிவில் மக்கள் பெற்றுக் கொள்ளும் வகையில், வைத்தியர்கள் நிபுணத்துவ பயிற்சிகளை பெறுவதற்கான வாய்ப்புகளை பாரபட்சமற்ற விதத்தில் உருவாக்கிட வேண்டும். மருத்துவத் துறையின் நவீன வளர்ச்சிக்கு ஈடுகொடுத்திடும் வகையில் தமிழீழ வைத்தியர்களின் திறன் வளர்க்கப்பட வேண்டும். தமிழீழ சுகாதார அமைச்சகமானது வைத்தியர்களின் மக்கள் நலன்சார் திட்டங்களையும் ஆலோசனைகளையும் உள்வாங்கி பரஸ்பர ஒத்துழைப்புடன் இயங்க வேண்டும். வைத்தியர்களுக்கு உரிய ஓய்வும் கொடுப்பனவுகளும் வழங்கப்பட வேண்டும். தமிழீழ வைத்தியத் துறையானது கியூப முன்னுதாரணங்களில் இருந்து கற்றுக் கொள்ள நிறையவே உள்ளன.

தேசத்திற்கு வைத்தியர்கள் பால் கடமைகள் உள்ளது போல், வைத்தியர்களுக்கும் மக்களின் பாலும் ஒட்டுமொத்த மனித குலத்தின் பாலும் ஆற்ற வேண்டிய கடமைகள் உண்டு.

குறிப்பாக, மூன்றாமுலகைச் சார்ந்த நம் தேச வைத்தியர்கள் சக மூன்றாமுலக வைத்தியர்களுடன் கைகோர்த்து ஏகாதிபத்திய முகாமும் மேற்குலகும் வைத்திய துறையில் வகித்துவரும் ஆதிக்க, சுரண்டல் போக்குகளுக் கெதிராகவும், வைத்தியதுறையை அறிவுச்சொத்துடமையாக்கிக் கொண்டுள்ள உலக வர்த்தக அமைப்பின் (WTO) ஏகபோகக் கொள்கையை எதிர்த்தும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டவும் போராட்டங்களுக்கு தலைமை தாங்கவும் வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள்.

◆ அங்கவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆடி... (4ஆம்பக்க தொடர்ச்சி...)

விடுதலையை அண்மித்து வருவதும் நமது போராட்ட வரலாறாய் விரிகிறது. விடுதலைப் பாதையில் பலமானதும் உறுதிமிக்கதுமான தடயங்களைப் பதித்து அரசியல் ஆளுமை பெற்றிருக்கும் நமது தேசம் தனது முழுமையான அரசியல் உள்ளாற்றலுடனும் வெளிப்படத் தொடங்கியுள்ளது.

நீண்ட போராட்டத்தின் வளர்ச்சிப் பண்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் போன்றே போராட்டத்தில் அணிசேரும் சமூக சக்திகளின் சேர்க்கையிலும் வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. தேசத்தின் அனைத்து சமூக சக்திகளும் தேசவிடுதலையுடன் தம்மை அடையாளம் காண்கின்றனர். மாணவர்கள், ஆசிரியர்கள், கடற்றொழிலாளர்கள், அரச ஊழியர்கள், மதகுருமார்கள்... என பல்வேறு சக்திகளினதும் அரசியல் சேர்க்கையில் தேசத்தின் வெகுஜன அரசியல் திரட்சி பெற்று விடுதலைப் போராட்டம் தன்னளவில் தீவிரமாக புதிய பரிமாணம் பெற்று வருகிறது.

நீண்ட போராட்டத்தின் விளைவாக சிங்கள அரசு சீர்குலைக்கப் பட்டிருக்கும் இன்றைய நிலையில், நமது விடுதலைப் போராட்டத்தில் உருவாகியிருக்கும் புதிய அரசியல் சக்திகளின் சேர்க்கை மற்றும் அதுசார்ந்து போராட்டம் எடுத்துவரும் புதிய பரிமாணம் யாவும் தொடர்ச்சியாக புதிய புதிய போராட்ட வடிவங்களையும் கோரி நிற்கின்றன. இந்த வளர்ச்சியின் இயங்கியலைப் புரிந்து கொண்டு பல்வேறு தேசபக்த சக்திகளினதும் பங்கேற்பையும் உள்வாங்கிக் கொள்ளும் வகையில் தேசத்தின் அக அரசியல் ஜனநாயகப் படுத்தப்பட வேண்டும்.

நடைபெற்ற இவ் ஜுலை ஹர்த்தாலில் பொதிந்துள்ள இன்னொரு புதிய செய்தி, அடக்கப்பட்ட தேசங்கள் தமக்கிடையே ஒருமைப்பாட்டுடனும் ஒத்துழைப்புடனும் சிங்கள சோவினிசத்திற்கெதிராக அணிதிரண்டதாகும். இம்மக்களுடன் சில சிங்கள இடதுசாரி கட்சிகளை சார்ந்தவர்களும் தோள் சேர்ந்து நின்றது குறிப்பிடத் தக்கதாகும். முஸ்லிம், மலையக தேசங்களின் பங்கேற்பு பிரதானமாக மலையக, சிறிலங்கா பிரதேசங்களில் ஹர்த்தாலின் வெற்றிக்கு அடித்தளமாயமைந்தன.

ஒருபுறம், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியும் விளைவுகளும், மறு புறம் சிங்கள சோவினிசமானது, மலையக, முஸ்லிம் தேசங்களை நசுக்குவதில் வெளிப்படுத்தும் தீவிரம் யாவும் மலையக, முஸ்லிம் தேசங்களின் வாழ்விலும் சிங்கள சோவினிசத்திற்கெதிரான அரசியல் திரட்சியையும், எதிர்ப்பையும் உருவாக்கியுள்ளது..

சிங்கள அரசினால் அடக்கப்படும் தேசங்கள் தமக்கிடையேயான ஒற்றுமைப் புள்ளிகளை இனங்கண்டு பொதுப் போராட்டத்தில் தோள் சேர்ந்திடும் களமாக இவ் ஹர்த்தாலை மாற்றியது இவ் ஹர்த்தால் விடுத்துள்ள புதிய செய்தியாகும்.

அவ்வகையில் முன்னணியில் நின்று போராடிக் கொண்டிருக்கும் தேசத்தினரான நாம் சக தேசங்களை இணைத்து பலமான சோவினிச எதிர்ப்பு முன்னணியைக் கட்டும் தார்மீக பொறுப்பைக் கொண்டிருப்பதை பிரக்ஞைக் கெடுத்துக் கொள்வோம்.

## தமிழகத்தில்... (7ஆம் தொடர்ச்சி...)

இருப்பிடங்களுக்கு சென்று விசாரணை செய்யும்.

★ தமிழீழத்திலும் சிறிலங்காவிலும் சிங்களப் படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள அகதி முகாம்களுக்கும் தமிழக அகதிமுகாம்களில் நிலவும் அடக்குமுறைக்கும் பாரிய வேறுபாடு கிடையாது. நமது தாயகத்திலும் சிறிலங்காவிலும் எதிரிகளினால் அகதிகள் மேல் மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள் வெளியுலகிற்கு தெரியவருவதற்கான வாய்ப்புகள் இருப்பதுடன், இவ்வடக்குமுறைகள் சார்ந்து தேசத்தின் பல்வேறு தரப்பினரும் குரல் கொடுத்து சர்வதேச அளவில் சிங்கள அரசை நிர்ப்பந்திப்பதற்கான வாய்ப்புகள் குறைந்த பட்சமாயினும் காணப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் குரல்வளை நெறிக்கப்பட்டவர்களாக இரும்புக்கர அடக்குமுறைக்குள் நமது மக்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

★ மிகத் தரங்கெட்ட (புழுக்களும் வண்டும் நிறைந்த) அரிசியே உணவுக்காக வழங்கப்படுகிறது. ஆரம்பத்தில் அகதிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவுத் தொகையில் மிக நீண்டகாலமாக அதிகரிப்புகள் ஏதும் செய்யப்படவில்லை. இதனால் உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவுக்கு ஈடுகொடுக்க முடியாது மக்கள் மேலும் மேலும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் தள்ளப்பட்டு வருகின்றனர். வறுமை, சுகாதாரக் கேடு, பட்டினி... என அவலங்களை சுமந்தபடி எதிர்காலம் பற்றிய கேள்விகளுடனும் மன உளைச்சலுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

★ அகதிகளுக்கான நிவாரண உதவிகள், புனர்வாழ்வு ஏற்பாடுகள் ஆகியவற்றை செயற்படுத்தும் அரச சார்பற்ற நிறுவனங்களின் மோசடித்தனங்களுக்கும் நமது மக்கள் பலியாக நேர்ந்துள்ளது. அகதிகளுக்காக கிடைக்கப் பெறும் வெளிநாட்டு உதவிகளை இவ்வரச சார்பற்ற நிறுவன பிரமுகர்கள் அபகரிக்கின்றனர். குறிப்பாக ஈழஅகதிகளின் பிரதிநிதியாக தன்னை பிரஸ்தாபித்துக் கொள்ளும் சந்திரகாசன் தான் நடாத்திவரும் ஈழ ஏதிலிகள் மறுவாழ்வுக் கழகத்தின் மூலமாக பல லட்சங்களை கொள்ளையடித்து வருகிறார். அது மாத்திரமல்ல, அகதிமக்கள் பற்றிய தகவல்களை இந்திய உளவுத்துறைக்கு வழங்குவதுடன், அகதிகள் மத்தியில் எழும் நியாயமான போராட்டங்களை உளவுத்துறையுடன் இணைந்து நசுக்கும் துரோகத்தனத்திலும் ஈடுபட்டுள்ளார். இவர்போன்ற மக்கள் விரோதிகளுக்கு அஞ்சி வாழ வேண்டிய அவமானகரமான நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் அகதி முகாம்களிலும் முகாம்களுக்கு வெளியிலுமாக ஒன்றரை லட்சம் ஈழத் தமிழர்கள் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். சொந்த மண்ணில் எதிர்கொண்ட உயிராபத்துகள், அவமானப்படுத்தல்களிலிருந்து தப்பித்து வாழ்வதற்காக தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள நமது மக்கள் , அந்நிய மண்ணில் தமது அடிப்படை சுயமரியாதையையே இழந்து புதிய வடிவங்களிலான அச்சுறுத்தல்களை எதிர்கொண்டபடி வாழ நேர்ந்துள்ளது.

இந்நிலையில் தமிழகத்திற்கு அகதிகளாக செல்வதிலுள்ள எதிர்மறை அம்சங்கள் குறித்து போராட்ட சக்திகளும் வெகுஜன அமைப்புகளும் நமது மக்கள் மத்தியில் தொடர்ச்சியான விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும். இந்தியா சென்று பாதுகாப்பாகவும் நிம்மதியாகவும் வாழலாம் என்பது உண்மையல்ல என்பதை மக்களுக்கு உணர்த்திட வேண்டும். சொந்த மண்ணில் தமது உரிமைகளுக்காக போராடியபடி வாழ்வதற்கான மன ஓர்மத்தை நம்மக்கள் தேசமாக பெறுவதற்கான அரசியல் உணர்வுத்தரத்தை வளர்த்திட வேண்டும்.

இதன் மூலம் அந்நிய மண்ணில் நம் மக்கள் துன்புறுவதிலிருந்து மக்களை பாதுகாப்பது மாத்திரமல்ல, ஈழ அகதிகளின் எண்ணிக்கையை காரணங்காட்டி இந்திய ஆதிக்க சக்தி புதுப்புது ஆக்கிரமிப்புக் கொள்கைகளை வகுப்பதிலிருந்தும் நமது தேசத்தை நீண்டகாலத்தில் பாதுகாக்கும் பாதுகாப்பு அரணை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

அதேபோல் தமிழகத்தில் வாழும் தமிழீழ அகதிகளின் உடனடி உரிமைகள் சார்ந்த நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டிய கடப்பாட்டை நாம் கொண்டுள்ளோம். தமிழகத்தில் அகதிகளாக வாழும் நமது மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் அநாகரீகமான அடக்குமுறைகளை சர்வதேச கவனத்திற்கு கொண்டுவருவது நம்மனைவரினதும் உடனடிக் கடமையாகும்.

அகதிகளுக்கு இந்திய அரசு ஐ.நா. விதிமுறைகளுக்குட்பட்ட அகதிகள் அந்தஸ்து வழங்க வேண்டும், தமிழகத்தில் வசிக்கும் காலம் வரையும் ஈழஅகதிகள் உரிய கௌரவத்துடன் நடாத்தப்பட வேண்டும். அகதிகள் மீது மேற்கொள்ளப்படும் அனைத்துவிதமான துன்புறுத்தல்களும் அவமானப்படுத்தல்களும் உடன் நிறுத்தப்பட வேண்டும். விசேட முகாம் முறைமையை இல்லாதொழிக்க வேண்டும். அகதிகளின் உடன்பாடின்றி தன்னிச்சையாக நாடுகடத்துவதை நிறுத்த வேண்டும். பயங்கரவாத குற்றச்சாட்டில் அகதிகளை கைது செய்வதை நிறுத்த வேண்டும். தமிழக சிறைகளில் சிறைவைக்கப் பட்டிருப்பவர்கள் பற்றிய விபரப்பட்டியலை உடன் வெளியிடுவதுடன் அவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் எனும் கோரிக்கைகளை நமது மக்கள் போராட்ட முழக்கங்களுடன் இணைப்போம். "தமிழக அகதிவாழ்வு" எனும் பெருஞ்சிறைக்குள் அகப்பட்டு தவிக்கும் நம்மக்களுக்காக தாயகத்திலும், சிறிலங்காவிலும், புலம்பெயர் மேற்குநாடுகளிலும் வாழும் நாமனைவரும் குரல் கொடுப்போம்.

◆ சுபத்திரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மக்களுக்கு... (ஐம் பக்க தொடர்)

ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள், எதிரிகளின் கொடூர அடக்குமுறைகள், விடுதலைப் புலிகளின் மக்களுடனான குறிப்பிடத்தக்க அணுகுமுறை முன்னேற்றங்கள், போராட்டத்தில் விடுதலைப் புலிகள் ஈட்டிவரும் அளப்பெரும் சாதனைக் குவியல்களும், இதன் காரணமாக மக்கள் விடுதலைப் போராட்டத்தின் பால் மேலும் நெருக்கமாக வந்து கொண்டிருப்பதும். அது மாத்திரமல்ல, போராட்டத்தின் அடிப்படைக் கோரிக்கைகளை மக்கள் தாமே முன்வந்து தாங்கி நின்று போராடுவதும் இவ்விடயத்தில் கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.

பல்வேறு நோக்கங்களுடன் அரசபடைகளுடன் நெருக்கமாகச் செயற்படும் ஆபத்தான சக்திகளும், ஊடுருவிச் செயற்பட விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட படையினரும் இணைந்து புதிய வடிவிலான தாக்குதல்களை நடத்த அதிகம் வாய்ப்புள்ளது. மேலும், இராணுவம் தனது நேருக்கு நேர் யுத்தத்தில் முதுகெலும்பு முறிக்கப்பட்டிருக்கும் நிலையில், இவ்வாறாக, புலிகளின் பிரதேசத்தை ஊடுருவிப் பதுங்கித் தாக்கும் ஒரு போர்முறையை இடைக்காலத்தில் பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கும் தள்ளப்பட்டிருப்பர். அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துவதும் எதிரிகள் நோக்கங்களில் ஒன்றாக அமையும். இப்படியான உத்திகளுக்கு அமெரிக்க, இஸ்ரேலிய ஆலோசனைகள் அதிகம் கிடைத்திருக்கும் என்பதும் வெளிப்படை. அனைத்துத் தாக்குதலும் காடுகளை அண்டிய பிரதேசத்தில் நடைபெற்றிருப்பது இங்கு கவனிக்க வேண்டியதாகின்றது. எனவே தாக்குதல் குழு தாக்குதலை முடித்துவிட்டு மீண்டும் காட்டுக்குள் புகுந்து கொள்வதாகவும் அதற்கான வளங்களையும் தகவல்களையும் கொண்டுள்ளதாகவும் கொள்ள வேண்டும்.

எதிரிகளின் இப்படிப்பட்ட உத்திகளை இனங்காண்பதும், எதிரிக்குக் கிடைக்கும் வளங்கள் மூலங்களை கண்டறிந்து அழிப்பதும், எதிர் உத்திகளை வகுத்து எதிரியின் நோக்கங்களை முறியடிப்பதும் அத்திவாசியமானது. இருந்தும் இத்தகைய மாற்று வழிமுறைகளில் நமது மக்களின் பங்குபற்றுதலை அதிகரிப்பதும். இவற்றினூடாக விடுதலைப் போராட்டம் தங்களுடையதென மக்களை பிரக்ஞை கொள்ளச் செய்வதும், மாற்றுவழிமுறைகளில் போது எடுக்கப்படும் நடவடிக்கைகளால் பரந்துபட்ட நமது மக்கள் முடிந்தவரை பாதிக்கச் செய்யாதிருப்பதை உறுதிப்படுத்துவதும் விடுதலைப் போராட்ட சக்திகளின் கடப்பாடாகும். எதிரிகள் போராளிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதும் அதற்காக போராளிகள் மேற்கொள்ளும் கடும் நடவடிக்கைகள் காரணமாக மக்கள் பாதிப்புற்று, மக்களுக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் இடையில் பகைமை உணர்வினைத் தோற்றுவிப்பதும் எதிரிகளின் வழிமுறையாகும் என்பதால், நமது தரப்பு மாற்று உத்திகள் குறித்து நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியுள்ளோம்.

அனைத்து மக்களையும் சந்தேகிப்பது, மக்களின் போக்குவரத்துகள் மீது கடுமையான, தாங்கமுடியாக் கெடுபிடிகளைப் பிரயோகிப்பதும், மிகவும் நெருக்கடியான காலங்களில் உயிர்களைப் பணயம் வைத்து பொருட்களை தடைசெய்யப்பட்ட பிரதேங்களுக்குக் கொண்டு வரும், அங்கிருந்து எடுத்துச் செல்லும் வியாபாரிகள் பலரை தயவுதாட்சண்யமின்று சந்தேகத்தில் சிறைப்படுத்துவதும் சித்திரவதைக்குள்ளாக்குவதும் மோசமான எதிர்விளைக் கொண்டு வரும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மனித உறவு மற்றும் உணர்வுகளைக் கையாள்வதில் முதிர்ச்சிக் குறைவான அணிகளிடம் இவ்வாறான பொறுப்புகளை தள்ளிவிட்டுத் தலைமை வளாதிருப்பது ஆபத்தான நீண்ட கால விளைவுகளுக்கு இட்டுச் சென்றுவிடும். மிக நீண்ட கால யுத்தக் கொடுமைக்குள் மக்கள் வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதையும் அனைத்துக் கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு போராட்டத்தின் வெற்றிகளுக்கும், அதன் நீடிப்புக்கும் மூலாதாரமாக இருக்கின்றார்கள் என்பதையும் நாம் ஒரு கணமும் மறந்துவிடக்கூடாது.

1999 இறுதிப்பகுதியில் வன்னிப் பெருநிலப்பரப்பு மீட்கப்படுவதற்கு முன்னர், விடுதலைப் புலிகளில் வசம் குறைந்தளவு நிலப்பரப்பும், படைகளில் ஆக்கிரமிப்பில் அதிக நிலப்பரப்பும் இருந்தது. தற்போது நிலைமை தலைகீழாகியுள்ளது. மேலும், நீண்ட காலம் தமிழீழப் பிரதேசங்களை எதிரிப்படையினர் ஆக்கிரமிப்பில் வைத்திருந்தமையினால் அவர்களுக்கும் குறிப்பிட்டளவிற்கு புவியியல் நிலைமை பற்றிய அறிவு தாக்குதல்களைத் திட்டமிடக் கூடியளவிற்கு இருக்கும் என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். தற்போது வன்னியினதோ, கிழக்கினதோ ஒவ்வொரு அங்குல காட்டுப் பகுதியையும், பாதைகளையும் கண்காணிப்பில் வைத்திருப்பது என்பது எவ்வளவு பலமான விடுதலைப் படைக்கும் கூட அசாத்தியம். மேலும் தமது கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இப்படியான தாக்குதல்களுக்கு எப்படி முகம்கொடுப்பது என்பது விடுதலைப் புலிகளுக்கு புதிய அனுபவமாகவும் உள்ளது.

எனவே மக்களின் பிரக்ஞை மிக்க பங்குபற்றலுடன் கூடியதாகவும், மக்களை அதிகம் நெருக்கடிக்குள்ளாவதை இயன்றவரை தவிர்க்கும் வகையில் அமைந்ததுமான வழிமுறைகளை நாம் கண்டறிய வேண்டும். நமது தரப்பிலிருந்து எதிரிகளுக்கு தகவல்கள் போகாதிருப்பதையும், எதிரிகள் தரப்பிலுள்ள தகவல்களை இயல்பாகவே விடுதலைப் புலிகளுக்கு மக்கள் பெற்றுக் கொடுப்பதையும் மக்களுடனான நெருக்கமான உறவின் அடிப்படையில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இவற்றின் பலத்தில் எதிர்-உத்திகள் வகுக்கப்பட்டு எதிரிகளின் ஊடுருவித் தாக்கும் நகர்வுகள் ஒட்ட நறுக்கப்பட வேண்டும். இதற்கு அனைத்து மக்களினதும் பூரண ஒத்துழைப்பினையும் விளிப்பினையும் விடுதலைப் புலிகள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

◆ தருமு

## சர்வஜன... (1ஆம் பக்க தொடர்ச்சி...)

பொருளாதார நலன்களைத் தாரைவார்க்கும் பண்புமே என்பதை தெளிவாக்க வேண்டும். அத்துடன் எமது நியாயமான தீவிரமான விடுதலைப் போராட்டமும் அடக்கப்படும் சக தேசங்களின் எதிர்ப்புப் போராட்ட வடிவங்களுமே அரசின் அடக்குமுறைப் பண்பினை அம்பலப்படுத்தி இன்றைய நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. சிறிலங்கா ஆளும்தரப்பின் சமாதான, ஜனநாயக முகமூடிகளைக் கிழித்தெறிந்துள்ளது. இந்த வகையில் எங்களுடன் நீங்களும் கைகோர்த்துக் கொள்ளுங்கள். என்ற அறைகூவலை விடுப்போம்.

தற்போது நிலவும் பல்வேறு நெருக்கடிக்குமான உண்மைக் காரணங்களை தற்போதைய அரசாங்கமோ, சிங்கள எதிர்க்கட்சிகளோ இன்னமும் மூடிமறைத்து சிங்கள மக்களை ஏமாற்றி மறுபடியும் ஆட்சிபீடம் ஏற முனைகின்றன. சொந்த சிங்கள மக்களையும், தேசிய அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வரும் மற்றைய தேசங்களையும் தொடர்ந்தும் அடக்கியாழ்வதற்கே எதிர்க்கட்சிகளின் கூட்டும் முனைகின்றன. அடிப்படைப் பண்பு மாற்றம் இல்லாத இவ்வாறான அணுகுமுறையானது யதார்த்த நிலைமையை வசதியாக மறைத்து மேலும் சிங்கள தேசத்தை சிக்கலுக்குள்தான் கொண்டு செல்லும் என்று சிங்கள மக்களுக்குத் தெளிவாக்குவதும் நமது அரசியல் கடமையாகும். ஈற்றில் தங்களது அரசியல் தலைவிதியை தீர்மானிப்பது முற்றிலும் அவர்களின் பொறுப்பாகும்.

## டக்ளஸ்... (3ஆம் பக்க தொடர்ச்சி...)

இன்னமும் எதிரித்தரப்பினர் இருப்பதற்கான அடித்தளத்தை உடனடியாக நாம் அனைவரும் தகர்த்திட வேண்டும். தேசத்தினுள் நிலவும் சில இவ்விடைவெளிகளையும், போராட்டத்தரப்புகளுக்கும் மக்களுக்கும் இடையில் நிலவும் சில முரண்பாடுகளையும், ஆங்காங்கு உருவாகும் கசப்புகளையும் இலாவகமாகப் பயன்படுத்த இச்சக்திகள் முயல்கின்றன. எதிரிகளுக்கு இந்த வாய்ப்பை தராது போராட்ட சக்திகளாகிய நாம் செயற்படுவதுடன் இவ்விடயங்கள் தொடர்பாக தேசத்தின் கவனத்தையும் தொடர்ச்சியாக ஈர்ப்போம்.

◆ விஜி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மக்கள் களம்

அன்புடையீர்,

வைகாசி மாத தங்களது இதழும் கிடைத்தது. நன்றி. கடந்த இதழ் தொடர்பாக சில வார்த்தைகள். தங்களது சகல இதழ்களிலுமே மக்களின் மனங்களையறியாத அந்நியத் தன்மை இருப்பதை என்னால் உணர முடிகின்றது. இதற்கு இரு காரணங்களை நான் முதன்மைப்படுத்திப் பார்க்கின்றேன். மக்கள் மத்தியில் தொடர்புகளைப் பேண முடியாத தங்களின் அரசியற் போக்கு. பத்திரிகை கிடைக்கும்-வாசிக்கும் வாசகர்களின் அரசியல் போக்கு.

எனினும் தங்களது கட்டுரைகளில் வார்த்தைகள் மிகக் கவனமாகக் கையாளப்படுவதை நான் காண்கிறேன். கட்டுரைகள் கூட இலங்கைப் பத்திரிகையின் கட்டுரைகளைவிட நன்றாகவே இருப்பதையிட்டும் மகிழ்ச்சி. சில சமயம் கட்டுரைகளில் இன்னும் வார்த்தைகளால் நீங்கள் "விளையாட்டுக்" காட்டியிருக்கலாமே என்றும் தோன்றும். ஏனெனில் உங்களுக்கு இதில் கட்டப்பாடு இருக்கும் என நினைக்கவில்லை. "கறாரான விமர்சனம் போன்று சூடான வார்த்தைகளால் நையாண்டி பண்ணி எழுதுவதுதான் மக்களை ஈர்க்கும்" என்று நான் விரும்பிப் படிக்கும் கட்டுரையாளரும், அவரது பேச்சைக் கேட்கக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை தவறவிடாமல் கேட்க எண்ணத் தூண்டுபவருமான ஒரு "முக்கிய நபர்" எனக்கு அறிவுரை கூறியிருந்தார். அவரது கூற்றினை இலங்கைப் பத்திரிகைகள் தொடுவதேயில்லை. அவ்வாறு கட்டுரை எழுதும் துணிவு எத்தனை கட்டுரைகளுக்கு இருக்கிறது என்கின்ற கேள்வியும் முக்கியம்? உங்களால் இதனைச் செய்ய முடியும். அதுவே தாக்கத்தை உண்டு பண்ணும் என்று நான் கருதுகின்றேன்.

சித்திரை இதழில் இடம்பெற்ற ஒரு கட்டுரை குறித்து. கிறிஸ்தவ ஆயர்கள் பற்றிய அக்கட்டுரை எனக்கு எரிச்சலை உண்டு பண்ணியிருந்தது. கட்டுரையில் இருக்கும் தங்களின் மனவிருப்பமும், எதிர்பார்ப்பும் தவறானவை அல்ல. எனினும் ஆயர்கள்-மதகுருமார் விடுதலைப் போராட்டத்திற்கு வழங்கும் பங்களிப்பினை (பல்வேறு வகையில்) நீங்கள் விமர்சிக்க விரும்பாமல் விட்டுவிடலாமா?? இது பற்றிய தெளிவின்மை தங்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். அல்லது இந்நேரத்தில் இதைமட்டும் முதன்மைப் படுத்துவோம் என்று கருதியிருக்கலாம்.

கொசோவோ பிரச்சினையில் கிறிஸ்தவ சபையின் கொடூரமும் அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு நிகராகச் சுட்டிக்காட்டப்பட்டன. ஸிம்பாபே நிலப் பிரச்சினையிலும் இதே கிறிஸ்தவ சமயப் பயங்கரவாதமே முக்கிய காரணி என்கிறார் ஒரு வெளிநாட்டுக் கட்டுரையாளர். (மேற்கொண்டு சிந்தியுங்கள்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்யும் ஏராளமான கிறிஸ்தவ சமயப் பாதிரியார்கள் இருக்கின்றார்கள். ஏன் சைவத்தை தூக்கி வைத்துக் கொண்டாடும் ஏராளமானவர்கள் கூட கிறிஸ்தவ சமயம்தான் தமிழீழ விடுதலைப் போருக்கு மிகப் பெரிய பங்களிப்பை செய்வதையும் ஒப்புக் கொள்வார்கள்.

இலங்கைப் பத்திரிகைகளுக்கு புலிகளின் இராணுவப் பலம்தான் விளங்கவில்லை என்றால் அவர்களின் அரசியல் நகர்வுகளும் புரிந்ததாகத் தெரியவில்லை. சிந்திக்க மறுக்கிறார்கள் இல்லையேல் ஏன் சோலியை விலைக்கு வாங்குவான் என்று எழுதப் பயப்படுகிறார்கள்.

பதுளைச் சிறைச்சாலையில் நடந்த அழகு ராணிப் போட்டியில் பொலிசாரால் அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தமிழ்ப் பெண் கைதியை தேசிய தமிழ் நாளிதழ் வெட்கமின்றிப் படத்துடன் பிரசுரித்திருந்தது. தேசிய சேவை ஒலிபரப்பில் நாள் மகிழரங்கம் என்னும் நிகழ்ச்சியிலே புலிகளைச் சாடுவதற்கு என்றே வரதர் வந்து அம்மாபாசம் பொழிகிறார். டக்ளஸ் ஒரு இரவல் தீர்வு சொல்கிறார். மக்கள் கண்டு கொள்ளாமல் விட்டாலும் இவர்களைப் பத்திரிகைகளும் கிழிக்காமல் விட்டுவிடலாமா?

அருள் - வவுனியா

---

பெருந்தகையீர் வணக்கம்,

தமிழீழம் தொடர்ந்து வருகிறது. செய்திகளை அறிந்து தெளிவடைகின்றேன். உணர்வுடன் நன்றுதலன்றி வேறு வகையில் தமிழர் உரிமைப் போருக்கு உதவ்ட இயலா நிலையில் உள்ளது வருந்தத்தருகிறது.

நிற்க. தமிழீழத்தில் வெளியான "விடியல்" ஏட்டிற்கான சிறு விளக்கம் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. அதில் "சிங்கள, மற்றும் தமிழ் இனவெறிப் போக்கிற்கு எதிராக போராடிக் கொண்டிருக்கும்" என்ற செய்தி உள்ளது. தமிழ் இனவெறி எனத் தமிழீழம் குறிப்பது எதனை? சிங்களம். தமிழ். முஸ்லிம் இந்த முறை சரியானதா?"தங்கள் விளக்கத்தை எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்

குணாளன் - நெல்லை - தமிழகம்

## சுயநிர்ணய... (12ம் பக்க தொடர்ச்சி...)

பற்றிய நிலைதான் என்ன? ஆக்ரா உச்சிமாநாடு எந்த விதத்திலும் காஷ்மீர மக்களின் அடிப்படை நலன்களில் அக்கறை கொண்டதல்ல. இதன் காரணமாகவே காஷ்மீர் விடயத்தில் இரு அரசுகளும் ஏற்கனவே செய்து கொண்ட உடன்படிக்கைகளும் தோல்வி கண்டிருந்தன என்பது படிப்பினையாகும்.

காஷ்மீர் மக்களின் பங்குபற்றுதல் இல்லாமல், அவர்களது தேசிய அபிலாசைகளை நிறைவு செய்யாத வகையில் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கைகள் அர்த்தமற்றதாகும், கபடத்தனம் மிக்கதாகும். உண்மையில் முத்தரப்புப் பேச்சுவார்த்தை என்பதும் அதில் ஒரு ஏற்பாடாக, காஷ்மீர் மக்களுடன் இரு நாடுகளும் தமது பிரச்சனைகளைப் பேசித் தீர்த்துக் கொள்வதாக இருக்க வேண்டும். மாறாக காஷ்மீரத்தின் அரசியல் எதிர்காலத்தைப் பற்றி மேற்படி இரண்டு ஆதிக்க அரசுகளும் காஷ்மீர் மக்களின் பங்குபற்றுதலின்றிப் பேசுவது என்பது அடிப்படைத் தவறாகும்.

காஷ்மீரம் தொடர்பான இறுதி முடிவை எடுக்கும் இறைமை, சுயநிர்ணயம் காஷ்மீர மக்களிற்கு மாத்திரமே உண்டு. தனிநாட்டைப் பிரகடனம் செய்வதோ, பாகிஸ்தானுடன் அல்லது இந்தியாவுடன் ஒரு பகுதியாக இருப்பதோ அம்மக்களின் சுயமான முடிவாக இருக்க வேண்டும்.

காஷ்மீரத்தின் கடந்த 50 ஆண்டுகால அழிவின் ஆக்கிரமிப்பின் பின்பும் தொடர்ந்து நிமிர்ந்து நிற்க செய்யும் அதன் வரலாறு அரசியல் எதிர்காலத்தை மிகவும் முனைப்புடன் எதிர்பார்க்கின்றது. இந்திய ஆக்கிரமிப்பு தளையில் இருந்தும் பாக்கிஸ்தானிய பிடியில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு தமது சொந்த மக்களின் விருப்பத்திற்கும் சுயமரியாதைக்கும் இறைமைக்கும் உரிய கட்டமைப்பைக் கொண்ட புதிய தேசமாக மலரவேண்டும்.

காஷ்மீர் பற்றி இரு அரசுகளும் வலிந்து முடிவு எடுக்க முனைவதானது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தடைசெய்வதை நோக்கமாகக் கொண்டிருந்த இந்திய- இலங்கை ஒப்பந்த முயற்சிக்கு ஒப்பானது. இச்சந்தர்ப்பத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் காஷ்மீர் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் ஒரு சமாந்தர ஒற்றுமை இருப்பதைக் காண்கின்றோம்.

நமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் ஏகாதிபத்திய அரசுகளும், இந்திய அரசும் சிறிலங்கா அரசுடன் இணைந்து , தமிழீழ மக்களின் தேசிய அபிலாசைகளை கிஞ்சித்தும் கணக்கெடுக்காமல், மறுபடியும் தமது நலன்களின் அடிப்படையில் தீர்க்க முனைவது, இப்பிராந்தியத்தில் யுத்தம் மேலும் விரிவடைந்து செல்வதற்கு வைக்கும் அடிக்கல்லாகும்.

***காஷ்மீரத்தினதும் தமிழீழத்தினதும்***
***அரசியல் எதிர்காலம் என்பது***
***அந்தந்த மக்களின் சொந்த முடிவிற்கே!***

◆ சாந்தன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழீழம்

www.thamileelam.org
info@thamileelam.org

'The Editor'
BM Box 4002
London, WC IN 3XX
United Kingdom

# தட்டுத்தடுமாறும் சிறிலங்கா அரசு, வெற்றித்திசையில் நம் விடுதலைப் போராட்டம் !

ஏற்கனவே ஆக்கிரமிப்புப் போர்முனையில் தோல்விக்கு மேல் தோல்வி கண்டு, தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசு, சிங்கள தேசத்துக்குள்ளேயே மற்றுமொரு போர் முனையைத் திறந்துள்ளது. ஆழ வேரோடிக் கிடக்கும் தேசிய அடக்குமுறைக் கொள்கையின் விளைவும், ஏகாதிபத்தியம், பிராந்திய ஆதிக்கத்திற்கு வளங்களைத் தாரைவார்க்கும் பொருளாதாரக் கொள்கையின் விளைவும் சேர்ந்து மீள முடியா அரசியல், பொருளாதார நெருக்கடிக்குள் சிறிலங்கா அரசினைச் சிக்க வைத்துள்ளது. விமானப்படைத்தளம் தாக்கப்பட்டமை, விமானங்கள் பல நொறுக்கப்பட்டமை நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

அரசுத்தலைமையானது, ஒரே சமயத்தில் சோவினிச பண்பினையும் கைவிட முடியாமலும், குறுகிய கோஷ்டி நலன்களையும் கைவிட முடியாமலும் நிற்பதுடன், வல்லரசுகளின் நுகத்தடிக்கும் தலைகவிழ்ந்து கிடக்கின்றது. மீள்வற்கு வழியாக மீண்டும் மீண்டும் யுத்தத்தை நாடுகின்றது. தன் அடக்குமுறைக் கரங்களை முஸ்லீம் மக்கள், மலைய மக்களை நோக்கியும் தீவிரப்படுத்தத் தொடங்கியுள்ளது. தன் ஆதிக்க இருப்பிற்காக யுத்தத்தை வரித்துக் கொண்டு, வெகுவிரைவில் தன் இருப்பையே இழக்கும் நிலைக்கு அரசு வேகமாக நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்த சூழலில், அரசியல், இராணுவ தளங்களில் உறுதிப்படுத்தப்பட்டு விட்ட நமது விடுதலையை துரிதப்படுத்துவதற்கும், நம்மை நேரடியாக எதிர்கொண்டிருக்கும் ஏகாதிபத்திய சக்திகளை முறியடிப்பதற்கும் அவசியமான போராட்ட வடிவங்களை வளர்த்தெடுப்பது நமது பக்க உடனடிக் கடமையாகும்.

நமது தேசத்திலிருந்து போராட்டத்துடன் இணைந்து வரும் பல்வேறு சமூக சக்திகளினதும் போராட்ட ஆற்றலை உள்வாங்கி போராட்டத்தை செறிவாக்குவது, சிங்கள சோவினிசத்திற்கு எதிராக எழுச்சிபெற்று வரும் சக தேசங்களுடன் ஒருமைப்பாட்டுக்கு வருதல், பொதுப் போராட்டங்களை முன்னெடுத்தல் என்பவற்றில் உடனடியாக கவனத்தை குவிப்போம். இவற்றில் விரைவும், அதிகூடிய அக்கறையும் கொள்வோம். தாமதப்படுத்தல்கள் அடக்கப்பட்டு வரும் அனைத்து தரப்பையும் அதிக விலை கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளிவிடும்.

ஜூலை இனவன்முறை நடைபெற்ற இப் 18வது வருடத்தில் சிங்கள இனவாதத்தின் கோரவெறிக்குப் பலியான, துன்புற்ற நமது மக்களையும், வெலிக்கடை சிறையில் தம்முயிரை அர்ப்பணித்த போராளிகளையும் அரசியல் கைதிகளையும் நினைவு கூர்வோம். நம் தேசத்தின் உயரிய அஞ்சலியை செலுத்துவோம்.

சிறையில் வாழ்ந்த காலங்களிலும் தேசவிடுதலையின் நியாயத்திற்காக போராடி வந்த அப்போராளிகளை கௌரவிக்குமுகமாக ஜூலை 27ஐ நம் தேசத்தின் அரசியல் கைதிகளின் தினமாக அனுஷ்டிப்போம். எதிரியின் சிறைகளில் வாழ்ந்தபடி தேசத்தின் உரிமைகளுக்காக இன்றும் போராடிக் கொண்டிருக்கும் நம் தேசத்தின் அரசியல் கைதிகளின் அடிப்படை மனித உரிமைகளுக்காகவும் விடுதலைக்காகவும் எழுச்சிப் போராட்டங்களை முன்னெடுப்போம்.

நமது விடுதலை வித்தின் விளைச்சலை நாம் அறுவடை செய்யும் காலம் அண்மித்து வருகிறது. தேசமாக அடையப்பெறும் விடுதலையை நம்மக்கள் முழுமையாக அனுபவிக்க வழிவகை காண்போம். தேசியவிடுதலைப் போராட்டத்தில் உறுதியாக நின்று, அகத்தே, ஜனநாயக அரசியல் சூழலை உருவாக்குவது, மக்களின் சுதந்திரமான அரசியல் வெளிப்பாட்டுக்கு ஊக்கமளிப்பது, சக தேசங்களுடன் சமத்துவமான அரசியல் உறவைப் பேணுவது. . .போன்றன, நம் தேசத்தின் வளமான எதிர்கால அரசியல் வாழ்விற்கு அடிப்படை நிபந்தனைகள். வரலாறு நம்மிடம் கோரிநிற்கும் கடப்பாட்டை நிறைவேற்றி உயர்மானுட விழுமியங்களைக் கொண்ட மக்கள் சமூகத்தினராக மனித வரலாற்றில் முத்திரை பொறிப்போம்.

# சுயநிர்ணய பாதையில் காஷ்மீர்



ஆக்ராவில் இந்திய- பாகிஸ்தான் தலைவர்களுக்கிடையிலான உச்சிமாநாடு தோல்வியில் முடிந்திருக்கின்றது. முரண்பட்ட ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்காத தோற்றப்பாட்டை அந்தந்த நாட்டு ஊடகங்கள் பிரச்சாரப்படுத்தி வருகின்றன. அந்தந்த நாட்டு ஆளுங்குழும நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக செய்தி ஊடகங்களும் செயற்படுவது தெளிவாகத் தெரிகின்றது.

இந்திய - பாகிஸ்தானிய அரசுகளின் தரப்பில், இப்பேச்சின் அடிப்படையே சுத்த மோசடித்தனம் மிக்கதாகும். போலியான அக்கறைகளையும் பிரமிப்பூட்டும் தவறான உருவகப்படுத்தல்களுமே மிகையாயிருந்தது. ஈற்றில் இருதரப்பின் கபட நாடகமும் அதற்கேயுரிய விதியைத் தழுவிக்கொண்டது.

பாகிஸ்தானைப் பொறுத்தவரை அரசியல் இருப்புக்கும் தனது இராணு ஆட்சிமுறைக்கும் உலக அரசியல் அங்கீகாரம் பெற்றுக்கொள்வது. அந்நாட்டில் உக்கிரமடைந்திருக்கும் அகமுரண்பாடுகளைத் திசை திருப்புவது. இவ்வாறான நோக்கங்களுக்கு இப் பேச்சுவார்த்தையைப் பயன்படுத்தியிருக்கின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை தனது மேலாதிக்க, விரிவாதிக்க நிலைப்பாட்டை விட்டுக் கொடுக்காது விட்டுக்கொடுப்பாளராக காட்டிக்கொள்வதும், இந்திய அரசிற்கும் அதன் மக்களுக்கும் இடையில் நிலவும் முரண்பாடுகளை திசைதிருப்புவதுமாகும். இதற்கு பாகிஸ்தானிய விரோத சித்தாந்தததை மேலும் பலப்படுத்திக் கொள்வது நோக்கமாகும்.

இத்தகைய சூழலில் நடந்து முடிந்த மாநாடு ஏகாதிபத்திய சக்திகளைத் திருப்திப்படுத்தும் ஒரு நோக்கத்தினையும் கொண்டிருந்தது. இரு நாடுகளையும் அமைதிப்படுத்தி தனது உலகமயமாக்கல் வலைப்பின்னலுக்குள் கொண்டு வரும் நோக்கில் ஏகாதிபத்திய அரசுகள் தொடர்ச்சியாக இரு அரசுகளுக்கும் அழுத்தம் கொடுத்து வருகின்றன. உலகமயலாக்கல் வலைப்பின்னலுக்குள் தென்னாசிய நாடுகள் முழுவதையும் முற்றாகக் கொண்டு வருவதில் முதன்மைத் தடையாக காஷ்மீர முரண்பாடு அமைந்திருப்பது ஏகாதிபத்திய முகாமுக்கு எப்போதும் சிக்கலாக இருந்து வருகின்றது.

தென்னாசியாவின் கோடிக்கணக்கான மக்களின் மனித உழைப்பு, பாரிய வணிகசந்தை, அளவிட முடியா இயற்கை கனிவளங்கங்கள், கனனி மயப்படுத்தல் போன்ற விடயங்களுக்காக தென்னாசிய நாடுகளில் தமக்கான ஒரு அமைதியை நிலைநாட்டுவதில் ஏகாதிபத்திய அரசுகள் கரிசனையைக் கொண்டிருந்தமை மேற்படி ஆக்ரா உச்சிமாநாட்டு அழுத்தத்திற்கு பிரதான காரணமாகும். இந்த வகையில் தென்னாசியப் பிராந்தியத்தில் முக்கிய கேந்திர புள்ளிகளாக காஷ்மீர், தமிழீழம் போன்ற தேசங்கள் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றைச் வழிக்குக்கொண்டுவருவதில் இந்த ஏகாதிபத்திய சக்திகள் அண்மைக்காலமாக தீவிர கவனத்தைக் குவித்துள்ளன.

இத்தகைய பின்புலத்தில் அம்மாநாட்டின் காஷ்மீரம்

(தொடர்ச்சி 11ல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்